பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 28 புதன்கிழமை (14.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 348

# மின் பற்றாக்குறை நீங்குவதற்கு இரண்டு மாதங்கள் செல்லும்

## சகல பகுதிகளிலும் இரவில் ஒரு மணிநேர வெட்டு மின்வலய ரீதியாக வெவ்வேறு நேரம் நிர்ணயம்

யாழ்ப்பாணம், நவம்பர் 14

★ குடாநாட்டில் உண்டாகியுள்ள மின்சாரப் பற்றாக்குறையை நீங்குவதற்கு இன்னும் இரண்டு மாதங்களாவது செல்லும்.

★ அதுவரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கும் மின்சாரத்தை சீரமைக்கப் பட்ட ஒழுங்கில் விநியோகிக்க ஏற்பாடாகி உள்ளது.

★ அதாவது, குடாநாட்டில் உள்ள ஏழு மின்வலயங்களின் கீழ் அடங்கும் பகுதிகளிலும் நாளாந்தம், இரவில் ஒரு மணிநேரம் மின்சார விநியோகம் நிறுத்தப்படும் - வெட்டப் படும்.

★ புதிய சீரமைப்பு ஒழுங்கின் பிரகாரம் மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரையும், இரவு 7 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையும் என்ற ஒழுங்கில், ஒன்று விட்ட ஒருநாள் முறையில் மின் தடை இருக்கும்.

நேற்று யாழ். செயலகத்தில் மின்சார சபையின் வட பிராந்திய முகாமையாளர் எஸ். சண்முகநாதனும் அரசாங்க அதிபர் கே. கணேஷும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இத்தகவல்கள் வெளியிடப் பட்டன.

பொது முகாமையாளர் எஸ். சண்முகநாதன் மின் விநியோக நிலைமை குறித்

(10ஆம் பக்கம் பார்க்க)

### இரவில் ஒரு மணிநேர மின்வெட்டு ஒழுங்கு முறை

முதலாம் நாள்

யாழ்ப்பாணம் - 7 மணி முதல் 8 மணி வரை

பருத்தித்துறை - 6 மணிமுதல் 7 மணி வரை

சாவகச்சேரி - 7 மணிமுதல் 8 மணி வரை

வட்டுக்கோட்டை - 5.45 மணிமுதல் 7 மணி வரை

கோம்பையன்மணல் - 8 மணிமுதல் 9 மணி வரை

இரண்டாம் நாள்

யாழ்ப்பாணம் - 6 மணிமுதல் 7 மணி வரை

பருத்தித்துறை - 7 மணிமுதல் 8 மணி வரை

சாவகச்சேரி - 5.45 மணிமுதல் 7 மணி வரை

வட்டுக்கோட்டை - 7 மணிமுதல் 8 மணி வரை

கோம்பையன்மணல் - 8 மணிமுதல் 9 மணி வரை.

## மடுத் தேவாலயப் பகுதியில் ஷெல் வீச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள மன்னார் மடுத் தேவால யப் பகுதியில் நேற்று மாலை வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

நேற்று மாலை சுமார் 5 மணியளவில் சரமாரியாக ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் சில, மடுத் தேவாலயப் பகுதியின் பின்புற மாக வீழ்ந்து வெடித்தன என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதன்போது 6 வயதுடைய அநோஜ் என்ற சிறுவனும், 76 வயதுடைய திரேசா என்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மருத்துவபீட அனுமதி மறுக்கப்பட்ட மாணவரைச் சேர்க்க நீதிமன்றம் உத்தரவு

### கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு மேலும் 30 பேர்

கொழும்பு,நவ.14

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல் கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நாற்பது மாணவர் களுக்கு அடுத்த ஒரு மாத காலத்துக்குள் அனுமதி வழங்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவைப் பணித்திருக்கிறது மேன் முறையீட்டு நீதிமன்றம்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட அனுமதி மறுக்கப்பட்ட பத்துத் தமிழ் மாண வர்கள் தாக்கல் செய்த மனுக்களைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், மனுதாரர்களுக்கு உரிய மருத்துவபீட அனுமதிகளை அடுத்த ஒரு மாத காலத்துக்குள் வழங்குவதோடு அவர்கள் ஒவ்வொருவருக்கும் செலவுத் தொகையாக தலா இருபத்தியையாயிரம் ரூபா வழங்கும்படியும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்தது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான வழிகாட்டு விதிகளை அட்சரம் பிசகாது கடைப் பிடிக்கும்படி பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், அதன் படி யாழ். மற்றும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு மேலும் சரியாக நாற்பது பேரை இன, மொழி, மத, பிறந்த இட வேறு பாடுகளைக் கருத்தில் கொள்ளாது அடுத்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்ததாக வைகோ, நெடுமாறன் மீது வழக்கு

### *பிணையில் விடுவிக்கக் கோரி மனு*

சென்னை, நவ. 14

விடுதலைப் புலிகளின் முன்னாள் அர சியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் மறைவுக்கு அஞ்சலி தெரி வித்து பேரணி நடத்த முயன்றவேளை கைது செய்யப்பட்ட வைகோ, நெடுமாறன் மற் றும் 362 தொண்டர்களுக்கும் எதிராக தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக் கத்துக்கு ஆதரவு தெரிவித்தது உட்பட நான்கு பிரிவுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இவர்களில் பழநெடுமாறன் உட்பட 12 பேர் தங்களைப் பிணையில் விடுவிக்கு மாறு கோரி எழும்பூர் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

திங்கட்கிழமை மாலை கைது செய்யப் பட்ட இவர்கள் எழும்பூர் ராஜரத்தினம் விளை யாட்டரங்கில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிராக இந்திய தண்ட னையியல் சட்டத்தின் கீழ் சட்டவிரோத மாக கூடுதல், தடையை மீற முயற்சி மற் றும் குற்றவியல் திருத்த சட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல், சட்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத்தொடர்பு நிலையத்தின் உரிமையாளர் நகரில் சனச்சந்தடிமிகுந்த வேளையில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ். நகர மத்தியில் நவீனசந்தையில் தொலைத்தொடர்பு நிலையம் நடத்தி வரும் வர்த்தகர் ஒருவர் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் அவரது தொழில் நிலையத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நகரில் சனநடமாட்டம் நிறைந்த நேரத்தில் சூட்டுச்சம்பவம் நடை பெற்றுள்ளதால் நகரில் பதற்றம் நிலவியது.

கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையில்வசிக்கும் தாமோதரம்பிள்ளை நவனகுமார் (வயது-43) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சாவகச்சேரி, டச்சுவீதியைச் சேர்ந்த இவர் இடம்பெயர்ந்து கொக்குவிலில் வசித்து வந்தார். இவர் மூன்றுபிள்ளைகளின் தந்தையாவார்.

நகரில் சனநடமாட்டம்மிகுந்த நேரத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரம் குறித்த பிரிட்டிஷ் விவாதம் ஒத்திவைப்பு

கொழும்பு ,நவ.14

பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றி நாடுகளில் விடுதலைப்புலிகள் மீது விதிக் கப்பட்டிருக்கும் தடையை நீக்கக்கோரும் ஒத்திவைப்பு வேளை விவாதம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற வில்லை.

இந்த விவாதம் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்திற்கு முன்னறி வித்தல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து அனைத்துக் கட்சிக் குழுவையும் கலைக்குக!

### 'பட்ஜெட்'டுக்கு வாக்களிக்க ஜே.வி.பி. நிபந்தனையும் காலக்கெடுவும்



கொழும்பு, நவ.14

வரவு - செலவுத் திட்டத்துக்கு (பட்ஜெட்டுக்கு) அரசுக்கு ஆதர வாக வாக்களிப்பதற்கு போர் நிறுத்த ஒப்பந் தத்தை ரத்துச் செய்வது உட்பட நான்கு நிபந் தனைகளை ஜே.வி.பி. விதித்துள்ளது.

நான்கு நிபந்தனைகள் தொடர்பான சாதகமான முடிவை ஆறுநாள்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று அக்கட்சி அரசுக்கு நேற்றுக் காலக்கெடுவிதித்துள்ளது.

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்று அரசுக்கு மேற்கண்ட நிபந் தனைகளையும் காலக்கெடுவையும் தெரி வித்தார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஜே.வி.பி. ஆதரவாக வாக்களிக்க வேண்டுமானால் கீழ்க்காணும் நான்கு நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக ஆறு நாள்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் - என்று அவர் தெரிவித் திருக்கிறார்.



அவர் விதித்துள்ள நிபந்தனைகள் வருமாறு:

(10ஆம் பக்கம் பார்க்க)

போர் நிறுத்த....

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வு முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ. 14

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கடந்த செப்ரெம்பர் மாதம் நடத்திய சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் முடிவுகள் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:

சைவப்புலவர்

செல்வி. விமலாவதி கந்தையா - மாரீசங்கூடல், இளவாலை (2ஆம் வகுப்பு), நடராசா திருக்குமரன் - இடைக்குறிச்சி, வரணி (2ஆம் வகுப்பு), திருமதி ஜனகா சிவசுப்பிரமணியம் - செல்லாச்சியம்மை வீதி, சுன்னாகம், (2ஆம் வகுப்பு), நடராசா புகன்சிறீந்திரன், மருதனார்மடம், சுன்னாகம் - (2ஆம் வகுப்பு), பாலசுப்பிரமணியஐயர் இந்திரசர்மா - நீர்கொழும்பு (2ஆம் வகுப்பு), கதிரித்தம்பி சிவானந்தன் - இலண்டன் (2ஆம் வகுப்பு), பொன்னம்பலம் சுகந்தன் - நெல்லியடி, கரவெட்டி (3ஆம் வகுப்பு).

இளஞ் சைவப்புலவர்

செல்வி. சோபிகா லோகேஸ்வரன் - நீர்வேலி (2ஆம் வகுப்பு), திருமதி. விஜயதரிசினி சோதிநாதன் - லண்டன், (2ஆம் வகுப்பு), செல்வி. தேவகி வைகுந்த நாதன் - கட்டப்பிராய், யாழ்ப்பாணம் (3ஆம் வகுப்பு), திருமதி எஸ். மனோராணி - பன்வில (3ஆம் வகுப்பு). (1)

## யாழ். மாநகரசபைப் பிரிவில் நாய்களுக்கு சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.மாநகரசபைப் பகுதியில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திர சிகிச்சை நாளைமுதல் எதிர்வரும் 20ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இக்காலப்பகுதியில் வரும் வியாழக்கிழமைகளில் குறிப்பிடப்படும் இடங்களில் இச்சத்திரசிகிச்சை இடம்பெறும் என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார்.

சத்திர சிகிச்சை இடம்பெறும் இடங்களும் திகதிகளும் வருமாறு-

* ஆரம்ப சுகாதார நிலையம் - சுவாமியார் வீதி, கொழும்புத்துறை - 2007.11.15
* யூபிலி மகப்பேற்று நிலையம், குருநகர் - 2007.11.22
* அருள் மாதா சனசமூக நிலையம், இராசாவின் தோட்டம் - 2007.11.29
* ஆரம்ப சுகாதார நிலையம், நாச்சிமார் கோயிலடி, வண்ணார்பண்ணை - 2007.12.06
* சென். நீக்கலஸ் சனசமூக நிலையம், நாவாந்துறை - 2007.12.13

ஆரம்ப சுகாதாரநிலையம் - பருத்தித்துறைவீதி, நல்லூர் - 2007.12.20

## புத்தூர் வடக்கில் இன்று முன்பள்ளி கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.14

புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் புனரமைக்கப்பட்ட முன்பள்ளிகையளிக்கும் நிகழ்வு இன்றுகாலை 9.30 மணிக்கு புத்தூர் வடக்கில் இடம்பெறவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து சுயவிருப்பின் பேரில் மீளத்திரும்பிய இலங்கையர்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த நிறுவனம் புத்தூர் வடக்கில் புதுவையூர் முன்பள்ளியை புனரமைத்துள்ளது. குடிதண்ணீர், விளையாட்டு முற்றம், தளபாடங்கள் ஆகிய வசதிகளையும் இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த முன்பள்ளிக் கட்டடத்தை அந்த அமைப்பின் இலங்கைக்கான சிரேஷ்ட வளமுகாமை அதிகாரி ஷியா அகமட் இன்று வைபவரீதியாகத் திறந்து கையளிக்க இருக்கின்றார். (1)

## உடற்கல்விப் பாட செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உடற்கல்விப் பாடம் கற்பிக்கும் தரம்7, தரம் 11 ஆசிரியர்களுக்கு புதியபாடத்திட்டம் தொடர்பானசெயலமர்வுகள் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்தச் செயலமர்வுகள் நாளை 15ஆம் திகதியும் மறுநாள் 16ஆம் திகதியும் நடத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (203)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை திருமதி அ.செல்வநாதன் அவர்களின் மாமி

**திருநாவுக்கரசு மகேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(சி/54358)

## குளவி கொட்டிய மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ. 14

பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து கிளம்பிய கருங்குளவிகள் வீதியில் சென்றோரைத் தாக்கியது.

தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற இரு மாணவிகள் உட்பட மூவர் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த கேசவன் லோவனா (வயது 13), சிவசுப்பிரமணியம் மிதுலா (வயது 17), சண்முகம் வித்தியநாதன் (வயது - 47) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (1-207)

## மரண அறிவித்தல்கள்



### நடராசா மயில்வாகனம்

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட நடராசா மயில்வாகனம் 12.11.2007 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற செல்லப்பா-இரத்தினசினோன்மணி (குங்குமம்) தம்பதியரின் அன்புமருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 40/8, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

### விரையா ஜெயருபன் (ருபன்)

இல. 16, இராஜ வீதி, நல்லூரை வசிப்பிடமாக கொண்ட வீரையா ஜெயரூபன் (12.11.2007) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

16, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: ஜெயசீலன் (சகோதரன்).

### கணபதிப்பிள்ளை செல்லம்மா

அம்மன் கோயில்வீதி, சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கு, பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்லம்மா நேற்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் நாகேந்திரம் (சுவிஸ்), தெய்வேந்திரம் (மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்), மகேஸ்வரி ஆகியோரின் தாயும் இராசாத்தி, புவனேஸ்வரி, வீரேந்திரன் (ஆனைக்கோட்டை றோ.க. பாடசாலை) ஆகியோரின் மாமியும் விசாலினி, துர்க்காலினி, கௌசித், ஞானகரன், விமலினி, விஜித்தன், நிருபன், சிந்துஜா, சௌமியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன், மருமகன்

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 14

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நிலைய அரங்கில் இடம்பெறவுள்ளது.

ச. ஏகாம்பரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மலர்மகள் தயாபரன், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய முன்னாள் உப அதிபர் திருமதி ஸ்ரீரங்கநாயகி பவானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (203)

* * *

யாழ்ப்பாணம், நவ. 14

ஸ்ரீ கல்கி பத்மாவதி சமேத ஸ்ரீ கல்கி பகவான் ஆகியோரின் பூசையும் பஜனையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு கச்சேரி வீதியில் உள்ள ஆன்மீக மையத்தில் இடம்பெறவுள்ளன. (203)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.

"THE ROYAL IS THE BEST"

**விற்பனைக்கு**

Photo Copy மெஷின் (Sharp) விற்பனைக்குண்டு. தொடர்பு: [illegible] சங்கத்தானை, சாவகச்சேரி. (சி/54347)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர்
இராமலிங்கம் பரராஜசேகரம்
அவர்களின் பாசமிகு அன்னை

**இராமலிங்கம் உருத்திரேஸ்வரி**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி. (சி/54357)

பணிப்பாளர், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் செல்வரத்தினம்



(இளைப்பாறிய ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்வரத்தினம் நேற்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் ஜெயசுந்தரம் (பாபு), ஜெயகௌரி (பாப்பா), விஜயசுந்தரம் (சுவிஸ்), மிருனாளினி, பார்த்தீபன் (இ.மி.சபை, யாழ்ப்பாணம்), மதிவதனி (சுவிஸ்), சிவசுந்தரம் (சுவிஸ்), கவிதா (கனடா), அமரர் வரத செந்தூரம் (செந்தூரன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நமசிவாயம் (கஜி வர்த்தக நிலையம், புன்னாலைக்கட்டுவன்), ஜெயசாந்தி, குணநேசன் (கனடா), சுவிதா (சுவிஸ்), ரட்ணராஜா (சுவிஸ்), நிர்மலாதேவி (சுவிஸ்), சந்திரகுமாரன், சறோஜினி (கனடா), நிரஞ்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனார்த்தனன், துஸ்ஜந்தினி, கஜன், சாளினி, கஜிதன், ரூபஜெயன், பிரதீப், ரகுதீப், கஜபாலினி, துலக்சனா, மதுஷன், தனுஷன், கௌசிகா, நிருஷன், விதுஷன், அபிஷன், சுருதிகா, ஷாஜினி, நிதுஷன், யாதவன், ஸ்ரீராம், தனுஷன், குகராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நீர்வேலி சியாக்கடவை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (67908)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், செ.பார்த்தீபன் (மகன் - இ.மி.சபை, யாழ்ப்பாணம்).



### வேலுப்பிள்ளை நவரத்தினம்

(ஏழாலை கிழக்கு)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரத்தினம் நேற்று(13.11.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரையப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருகனும் ஜெயாசினி (லண்டன்), கேதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை, சைவமகாஜன வித்தியாலயம், ஏழாலை), ராமேஸ்வரன் ஆகியோரின் தகப்பனாரும் கலைச்செல்வன் (லண்டன்), கேமா (சுவிஸ்), சிவகுமார் (சாலைப் பரிசோதகர், இ.போ.ச - கோண்டாவில்) ஆகியோரின் மாமனும் சுப்பிரமணியம், பூமணி, அமரர் துரைராசா (உரும்பிராய்), மனோன்மணி (கனடா) ஆகியோரின் சகோதரரும் இராசையா, கந்தவனம், தெய்வானை, சிவக்கொழுந்து, இராசம்மா, அமரர் செல்லமுத்து, சுப்பிரமணியம், தங்கம்மா, லட்சுமி, தர்மலிங்கம், சண்முகலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகேசு, தம்பித்துரை ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் கௌதீஸ், லக்சுமி, மிதூர்ஷ ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2007) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியடி வைரவர் கோயிலடி, காசிவாசி செந்திநாதையர் வீதி, ஏழாலை கிழக்கு. (67917)

தகவல்: ந.ராமேஸ்வரன் (மகன்).

### திருமதி வல்லிபுரம் கனகம்மா



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் கனகம்மா 11.11.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் வல்லிபுரத்தின் பாசமிகு மனைவியும் தங்கராசா (சவூதி), சறோசாதேவி, தவராசா (சவூதி), சிவராசா, இன்பதீஸ், வேலுப்பிள்ளை, இந்திராணி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் கலாநேசம், மகேந்திரன் (சவூதி), லதாநேசம் (மா.வைத்திய சாலை, சாவகச்சேரி), ஸ்ரீகுமுதினி, தர்சினி, புஸ்பராணி, செல்வரத்தினம், ஆனந்தன் (தெ.ப.வள அ/தி கூ.ச) ஆகியோரின் பாசமிகு மாமியும் செல்லம்மா, பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சரவணை, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் கவிக்ஸ் (இந்தியா), கவிராஜ், சத்யா, சரண்யா, கார்த்திகா, ஜனாந்தன், மதனிகா, தினுஜா, சந்தியா, ரதீஸ்வரன், ரதீஸ்குமார், யதீஸ்குமார், யதுர்சன், சுயாத்தா, ஜெகன், சுயன், அபி, யசோதரா, சந்திரிக்கா, யசோதரன், சர்மிலா, கஜீபன், தாரணி, அமுதா, அனுசியா, அஜந்தன் (சவூதி), அஜிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.11.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. (67919)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாணவர் எண்ணிக்கை குறைவுதான் எனினும் கற்பித்தலுக்குக் குறைவில்லை

## கொக்குவில் ஸ்தான சிலோன் பாடசாலை கல்விப்பணி பற்றிய ஒரு பார்வை

'அண்ணாவும் இந்தப் பாடசாலையில் தரம்5 இல் கல்வி கற்றுத்தான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர். நானும் இங்கு படித்து தரம் 5இல் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 123 புள்ளிகளைப் பெற்றுள்ளேன். என்னுடைய தம்பி, தங்கை இரண்டு பேரும் இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் படிக்கிறார்கள். அண்ணா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்று வருகின்றார். நானும்



யாழ்.இந்துக்மகளிர் கல்லூரியில் 6 ஆம் ஆண்டு படிப்பதற்கு ஆவலாக உள்ளேன் என்கின்றார் ரஜீந்திரன் மதுஷா .

கொக்குவில் ஸ்தான சிலோன் கிறிஸ்தவ கலவன். பாடசாலையில் தற்போது தரம் 5 இல் பயின்று வருகிறார் மதுஷா.

நல்லூர் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்டதாக அமைந்துள்ள இந்தப் பர்டசாலை கொக்குவில் மேற்கில் காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையினால் அமைக்கப்பட்ட இப் பாடசாலை 1961ஆம் ஆண் டில்



ஆர் மதுஷா

நடைமுறைப் படுத்தப்பட்ட பாடசாலைகள் கையேற்கும் சட்டத்தின்கீழ் இப் பாடசாலையும் கையேற்கப்பட்டுஇயங்கி வருகின்றது.

தரம்1 இல் இருந்து தரம் 5 வரையான வகுப்புகளைக் கொண்டுள்ள இப் பாடசாலை அதிபர் மற்றும் இரண்டு ஆசிரியர்களுடன் இயங்கி வருகின்றது.

மொத்தம் 23 மாணவ மாணவிகள் இங்கு கல்வி பயின்று வருகின்றார்கள். பாடசாலையின் கற்பித்தலைப் பொறுத்தமட்டில் தரமான கற்பித்தல்கள் இடம் பெறுகின்றது. கடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு இப் பாடசாலையிலிருந்து இரண்டு மாணவிகள் தோற்றியுள்ளார்கள். இம் மாணவிகள் முறையே 123, 83 புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். மாணவ மாணவிகள் அனைவரும் சுத்தமான முறையில் உடையணிந்து வருவதுடன் பழக்கவழக்கங்கள், ஒழுக்கம் என்பவற்றில் மிகவும் சிறந்து விளங்குகின்றமையை நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவமாணவிகளின் பொருளாதார உதவிகளை நோக்கும் போது மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையிலேயே அவர்களது குடும்பங் கள் உள்ளமை தெரிகின்றது.

பாடசாலையில் நிர்வகிக்கும் அதிபரும் சரி ஏனைய ஆசிரியர்களும் சரி தமது பாடசாலை மாணவர்களையும் ஏனைய பாட சாலைகளின் மாணவர்களைப் போன்று கல்வியில் உயர வைப்பதற்குக் கடுமையாக உழைத்து வருகின்றார்கள்.

பாடசாலை அதிபர் திருமதி யோ.திரவியநாதன் தெரிவிக்கையில்:

ஏனைய பாடசாலைகளைப் போன்று வசதி வாய்ப்புக்கள் எதுவும் பெரிதாக இல்லை. ஆசிரியராகிய நாங்கள் இங்கு கற்பிக்கும் மாணவர்களைத் தூக்கிவிட வேண்டும் என்பதற்காக உழைக்கின்றோம். இதன் ஒரு கட்டமாக அடுத்தாண்டு தரம் 1 இல் மாணவர்களைக் சேர்ப்பதற்கு புதிய முயற்சியை முன்னெடுக்கின்றோம். இந்தப் பாடசாலை சுற்றாடலில் காணப்படும் எட்டுக்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தரம் 1 இல் மாணவர்களை இணைப்பதற்கு உதவி செய்யும்படி கோரியுள்ளோம்.

எமது பாடசாலையில் இருந்தும் கடந்த காலங்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இங்கு கற்கும் மாணவர்கள் ஏனைய பாடசாலைகளில் அனுமதி கிடைக்காத நிலையில்தான் இங்கே வந்துள்ளார்கள். அவர்களுக்கு நாம் தரமான கல்வியை உரிய முறையில் வழங்குகின்றோம். தற்போதும் கூட தரம் 1 இல் 8 மாணவர்களும், தரம் 2 இல் 3 மாணவர்களும், தரம் 3 இல் 4 மாணவர்களும், தரம் 4 இல் 4 மாணவர்களும், தரம் 5 இல் 3 மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள். இதில் 2 மாணவிகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள். பல மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளின் அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் எமது பாடசாலை மாணவ, மாணவிகளின் அடைவு மட்டம் நன்றாக இருக்கின்றது.




ஆனாலும் போதிய மாணவர்கள் இன்மையால் எங்களால் பாடசாலை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு நிகழ்வுகள் என்று எதனையும் நடத்தமுடியவில்லை.

இம்முறை கூட தரம் 5 புலமைப்பரி சில்பரீட்சையில் கூடி யபுள்ளி பெற்ற மாணவிக்கான பரிசளிப்பு நிகழ்வுக்குக் கூட அயலில் உள்ள 'சற்ஸ்ரெக்' இஞ்சினியேர்ஸ் நிறுவனம்தான் பண உதவி செய்தது.

இப் பரிசளிப்பைக் கூட நாம் கொக்குவில் மேற்கில் ஆனைக்கோட்டை வீதியில் அமைந்துள்ள கொக்குவில் சீ.சீ.தமிழ் கலவன் பாடசாலையுடன் இணைந்துதான் நடத்தினோம். இந்நிகழ்வில் எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளி பெற்ற செல்வி ரவீந்திரன் மதுஷாவுக்கும் பரிசில் வழங்கப்பட்டது. இங்கு கல்விகற்கும் மாணவ, மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள், நாம் வழங்கி வருகின்றோம். மதிய உணவு கூட பிள்ளைக ளின் விருப்பத்தை நாளாந்தம் கேட்டே செய்து வழங்கிவருகின்றோம்.

எமக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் பிள்ளைகளுக்கு



அதிபர்
திருமதி யோ.திரவியநாதன்

வேண்டிய சில செயற்பாடுகளுக்கும், தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிதி உதவியை வழங்கிவருகின்றார். அவருடைய பெயரைக்கூட வெளியிட அவர் விரும்பவில்லை. அவர் யார் என்றே தெரியாது.

எங்களுக்கு ஏனைய பாடசாலைகளைப் போன்று துறைசார்ந்த ஆசிரியர்கள் இல்லை. ஆங்கிலம் கற்பிக்கக் கூட மாதம் 2 ஆயிரம் ரூபா சம்பளம் கொடுத்து ஓர் ஆங்கில ஆசிரியரைத் தொண்டர் ஆசிரியராக நியமனம் செய்துள்ளோம்.

மாணவர்கள் தமிழ்த் தினப்போட்டி போன்றவற்றிலும் கலந்து கொண்டு வருகின்றார்கள். தளபாடங்கள் பற்றாக்குறையென் பது இல்லை. நாம் மூன்று பேர் 5 வகுப்பைப் பார்க்க வேண்டியிருப்பதனால் சில வகுப்புகளை இணைத்து நடத்தி வருகின்றோம்.

இங்கு கல்விகற்கும் மாணவர்களுக்கு தரம் 6 அனுமதியில் முன்னுரிமை யாக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வெட்டுப் புள்ளிகளை குறைத்து அனுமதி தருவதாகவும் எமக்கு தெரிவித்துள்ளார் என்றார் அதிபர்.

கட்டட வசதி உள்ளது. எனினும் தனித்தனி வகுப்பறைகள் இல்லை.

விளையாட்டு மைதானம் இல்லாமையும் பொதுப்போட்டிகளில் கலந்து கொள்ளக் கூடியளவு மாணவர்கள் இன்மையாலும் இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சிறிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

ஆனாலும் அதிபர், ஆசிரி யர்களுடன் மாணவர்கள் தமது உணவுத் தேவை முதல் பாடசாலைத் தேவை வரை பெற்றோர்கள் (குடும்பம்) போன்று பழகுவதினால் இம் மாணவர்கள் ஏனைய விடயங்களை கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை என்பது அவர்களுடன் உரையாடும் போது தெரிகிறது.

பிரபல்யம் மிக்க வசதிகள் நிறைந்த பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களை நியமிப்பதை விடுத்து இத்தகைய சிறிய பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாது ஆசிரியர்களின் நியமனத்தை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் அயலில் காணப்படும் பிரபல்யமான பாடசாலைகளில் தரம் 1 அனுமதிக்கு முண்டியடிக்கும் நிலைமையை மாற்ற முடியும்.

கற்பிப்பிப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இப்பாடசாலையில் இல்லையென அறிந்த பின்னர் எந்தவொரு பெற்றோரும் தமது பிள்ளையை இங்கு சேர்ப்பதற்கு முன்வர மாட்டார்கள்.

இப் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியில் பெரும்பங்கு கல்வித் திணைக்களத்திலேயே தங்கியுள்ளது. போதிய ஆசிரிய வளத்தை நியமனம் செய்தால் அயலில் உள்ள பெற்றோர்களில் குறிப்பிட்ட சிலரேனும் இப் பாடசாலையில் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பி வைப்பார்கள்.

-பவித்திரன்.



யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் மாணவ தலைவர் ஒருவருக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம்.



வடமாகாண கல்வித்திணைக்களம் நடத்திய 2007 ஆம் ஆண்டுக்கான ஆங்கிலதினப் போட்டியில் சிரேஷ்ட பிரிவுக்கான நாடகப் போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை முதல் இடத்தினைப் பெற்றுள்ளது. இப்போட்டி கடந்தமாதம் 20 ஆம் திகதி வவுனியா சைவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.



மானிப்பாய் மெமொறியல் ஆங்கில பாடசாலையில் ஆசிரியர் தின விழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவும் அண்மையில் இடம்பெற்றது.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று ஆயிரம் ரூபா பணப்பரிசும், பெறுமதிமிக்க பரிசில்களும் பெற்ற சு.டயனா, ஜெ.அகிலா, ப.கஜகோகுலன், ச.சுலோசனா, ஜெ.நிதுர்ஷன், வி.க[illegible] [illegible] மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.
(படம்: செ.ரமேஷ்)

## இப்படி உள்ள மாணவனை எப்படிச் சமாளிப்பது? (கடந்த வாரத் தொடர்ச்சி)

*டிப்ஸின் படிப்பு முடிவடைந்தது. விடைபெறும் நாளன்று ஆசிரியையின் கைகளைப் பற்றி, "அம்மா எனக்கு இந்த இடம் மிகவும் பிடித்துள்ளது. எனக்கு நீங்கள் செய்துள்ளது எவ்வளவு தெரியுமா?" என் றான்.*

*ஆசிரியர்களும் மாண வர்களும் மகிழும்படி அந் தப் பள்ளியின் விழாக் களில் டிப்ஸ் பங்கேற்றான்.*

*மூன்று ஆண்டுகள் கழிந்தன. மிஸ்என்சல் இடம் மாறி வேறு வீட்டில் தங்கி யிருந்தார். வீட்டில் முன் அமர்ந்து ஒரு புத்தகம் படித் துக் கொண்டிருந்தார். திடீரென், "டேய், என்னி டம் 27 விதைச் செடிகள் உள்ளன. உன்னிடம் உள்ள தைக் கொண்டு வா; மாற் றிக் கொள்ளலாம் என்றது ஒரு பையனின் குரல். முன்பே கேட்ட குரல். ஆம், அது 9 வயதான டிப்ஸேதான் தன் நண்ப னிடம் பேசியது.*

*சைக்கிளில் சென்ற டிப்ஸ் ஆசிரியை முன் வந்தான். "ஹலோ டீச்சர், நலமா? ஒவ்வொரு வியாழனும் ஒரு மணி நேரம் நினைவுள்ளதா?" என்றான்.*

*மிஸ் எஞ்சலும், "அது சரி. உன் விதைச் செடிகள் நலமா?" என்றார். டிப்ஸ் இதனை எதிர்பாக்கவில்லை. அவனது பெற்றோர்களை எஞ்சல் கண்டு மகிழ்ந்தார்.*

*ஆண்டுகள் உருண்டன. ஒரு பள்ளியின் செய்தித்தா ளில் வந்த கடிதத்தை ஒருவர் மிஸ் எஞ்சலிடம் காட்டி னார். அப் பள்ளின் தலைமை ஆசிரியருக்கும் மற்ற ஆசிரியர் களுக்கும் எழுதப்பட்ட தாக்குதல் கடிதம் அது.*

*அதில், 'எனது நண்பனைத் தவறாகப் பள்ளியிலிருந்து நீக்கம் செய்ததைக் கண்டிக்கிறேன். அவன் வரலாற் றுத் தேர்வில், தான் குறிப்பிட்ட நாள் சரியானதா என அறியமுயன்றான். அது தவறு என்று கூறி அவனை வெளியேற்றினீர்கள். தான் குறிப்பிட்ட நாள் சரியா, தவறா எனப் புத்தகத்தைப் புரட்டிப் பார்ப்பது பெரிய தவறா என்ன?*

*'அப்படியானால் கல்வியின் நோக்கம் தான் என்ன? தேர்வை ஒரு கருவியாக்கி முன்னேற முயலும் ஒரு மாணவனைச் சிறுமைப்படுத்துவதா? வாழ்வில் எத்தனையோ முக்கியமானவை உள்ளன. அவற்றை எல்லாம் விட்டுவிட்டு அதிகாரத்தையும் ஆணவத்தை யும் காட்டுவதா? பழிவாங்குதல், தண்டித்தல், மனம் நோக வைப்பது இவையா உங்கள் வேலை?*

*கல்வியாளர்கள் வெறுப்புணர்ச்சிக்கு ஆளாகக் கூடாது. என் நண்பனிடம் மன்னிப்புக்கோரி பள்ளியில் சேர்காவிட்டால் நானும் பள்ளியிலிருந்து விலகிக் கொள்கிறேன். இப்படிக்குத் தங்கள்- டிப்ஸ்'.*

*இவ்வாறு டிப்ஸ் கடிதத்தை முடித்திருந்தான். பார்த்தீர்களா மாறிய இந்த டிப்ஸை! திறமையும் மற்றவர்களின் நலனில் அக்கறையும் கொண்ட ஒரு தலைவனாக அல்லவா மாறிவிட்டான் அவன்! மிஸ் எஞ் சல் இக் கடிதத்தை பெருமிதத்துடன் வைத்துக் கொண் டார். நாமெல்லோரும் வளர்கிறோம்; முன்னேறுகின் றோம், நம் அனுபவங்கள், தொடர்புகள், எண்ணங்கள், உணர்வுகள் மூலம் இவை எல்லாவற்றின் ஒட்டு மொத் தமல்லவா நம் வாழ்க்கை?*

*தங்குதடையற்ற சுதந்திரமும் அன்பு ஊற்றும் டிப்ஸின் வாழ்க்கை[illegible]*

-நன்றி: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

*கரவெட்டிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி*
*உத்தியோகத்தர்* **இ.பரராசசேகரம்**
*அவர்களின் அன்புத் தாய்*

**திருமதி இராமலிங்கம் உருத்திரேஸ்வரி**

*அவர்கள் 12.11.2007 அன்று காலமானதையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*யாழ் .மாவட்டம்.* (67909) **கிராம அபிவிருத்திக் குடும்பம்.**


## சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை பணியாளர்களுக்கான சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது.

அதன் தலைவராக திருமதி ச.திலகவதியும், செயலாளராக த.ரமேஸ்குமாரும், பொருளாளராக என்.ஆனந்தராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (203-224)

## கண்ணீர்க் காணிக்கைகள்...



சிரேஷ்ட விரிவுரையாளர்

**அமரர் சிவகுரு உமாகாந்தன்**

M.A. (Jaffna), B.Com.(Hon.) (Vid.)
Dip.in.Pub.Ad. (Jaffna) - SLTES - 1

எமது நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளரான அமரர் சிவகுரு உமாகாந்தன் அவர்களின் மறைவையிட்டு, அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(67910) HNDIT விரிவுரையாளர்கள், மாணவர்கள், [illegible]

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2008

1.கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 23.11.2007 நண்பகல் 12 மணிவரை
2.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 28.11.2007 பி.ப. 12.30 மணிவரை
3.கேள்வி திறக்கப்படும் திகதி :-29.11.2007 முற்பகல் 10 மணி
4.கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15 வீதம் சேர்த்து அறவிடப்படும்.
5.கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்குப் பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
6.மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.


**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் வற்வரி நீங்கலாக | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 01. | நெல்லியடி மரக்கறிச் சந்தை | 2200000.00 | 20000.00 | 1000.00 | - |
| 02. | நெல்லியடி மீன் சந்தை | 90000.00 | 2500.00 | 300.00 | - |
| 03. | கோயிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 30000.00 | 2000.00 | 300.00 | - |
| 04. | கொட்டடிச் சந்தை | 2000.00 | 500.00 | 300.00 | - |
| 05. | நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல:1 | 51500.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 06. | நெல்லியடி சந்தை கோழிக்கடை | 16600.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 07. | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல:2 | 46750.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 08. | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை இல:1 | 266000.00 | 5000.00 | 300.00 | 200.00 |
| 09. | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை இல:2 | 3000000.00 | 5000.00 | 300.00 | 200.00 |
| 10. | கோயிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 16600.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 11. | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 165000.00 | 5000.00 | 300.00 | 100.00 |
| 12. | கொட்டடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 45000.00 | 500.00 | 300.00 | 200.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 13. | உடுப்பிட்டிச் சந்தை | 260000.00 | 5000.00 | 300.00 | - |
| 14. | அந்திரான் சந்தை | 17000.00 | 500.00 | 300.00 | - |
| 15. | நவிண்டில் சந்தை | 4000.00 | 500.00 | 300.00 | - |
| 16. | உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 310000.00 | 5000.00 | 300.00 | 100.00 |
| 17. | உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 5700.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 18. | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 185000.00 | 5000.00 | 300.00 | 100.00 |
| 19. | உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 40000.00 | 500.00 | 300.00 | - |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 20. | துன்னாலை வடக்கு சந்தை | 1000.00 | 500.00 | 300.00 | - |
| 21. | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 39000.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 22. | அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 23100.00 | 500.00 | 300.00 | 100.00 |

**சி.வே.குலநாயகம்,**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி. 12.11.2007 (சி/54348)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ 18 ★ 03 ★ 1951



மனம் நெகிழ 15 ★ 10 ★ 2007

*அமரர்*

**இராமலிங்கம் அற்புதராசா**

கடந்த சர்வசித்து வருடம் புரட்டாசிமாதம் 29ஆம் நாள் (15.10.2007) திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பவிளக்கு அமரர் இராமலிங்கம் அற்புதராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.11.2007) புதன்கிழமை மு.ப.11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

*(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)*

*கைதடி, நுணாவில்,*
*சாவகச்சேரி.* (67912) **அ.பிரதீபன்** *(மகன்).*

## மரண அறிவித்தல்

### *தில்லையம்பலம் கந்தையா சண்முகநாதன்*

**(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்-ஆனைக்கோட்டை, மானிப்பாய் ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபை முன்னாள் உறுப்பினர்)**



ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகநாதன் அவர்கள் நேற்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அம்மணி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லச்சாமி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் அமரர் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் அமரர் கமலேஸ்வரியின் அன்புத் தந்தையும் அமரர்களான தம்பிப்பிள்ளை, நாகம்மா மற்றும் கதிரேசு (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் பெரிய தம்பி சுப்பிரமணியத்தின் மைத்துனரும் கணேசலிங்கம், கணேஸ்வரி, கமலாம்பிகை, தில்லையம்பலம், கனகாம்பிகை ஆகியோரின் பெரிய தந்தையும் மகேஸ்வரி, இரவீந்திரநாதன் (கனடா), குணரத்தினம், அமரர் இன்பராணி மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் அருமை மாமனும் கிருஷ்ணவாணி, கணேஸ்வரன், மகேஸ்வரன், தர்மேஸ்வரன், கலைவாணி, தணிஸ்வரன், சுதர்சன் (பிரான்ஸ்), சண்முகப்பிரியா (பிரான்ஸ்), சுரேசன் (பிரான்ஸ்), சுதர்சினி, சிவரூபினி, சிவதாரணி, சிவராகினி, செல்வகணேஸ், செந்தூரன், செந்தாஜினி, செயந்தினி, றஜிதா, ஷாருஹா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க.கதிரேசு.**
*(சகோதரன் - இளைப்பாறிய ஆசிரியர்).*

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (67911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரையும் புலிகளையும் வேறுபடுத்தி காட்டமுயல்வது வெறும் முட்டாள்தனம்

## நாடாளுமன்றில் ஜெயானந்தமூர்த்தி விளக்கம்

கொழும்பு,நவ.14

தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திக் காட்ட அரசு முனைந்தால் அது முட்டாள்தனம். கடைசி வரை தமிழ் மக்களையும் புலிகளையும் பிரிக்க எந்த ஒரு சக்தியாலும் முடியாது. இவ்வாறு கூறினார் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஜெயானந்தமூர்த்தி.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களினதும் மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் உரிமைக்காகத் தமது உயிரையும் தியாகம் செய்து வருகின்றனர். இதனை சிறு குழந்தையும் அறியும்.

ஆனால், ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றோம்!'' என்று பஸில் ராஜபக்ஷ நீலிக்கண்ணீர் வடிக் கின்றார். இது சிறுபிள்ளைத்தனமானது.

புலிகளால் எமக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது என்று பம்மாத்துக் காட்டிக் கொண்டு அரசே எமக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சபையில் பேசிய மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும் அமைச்சருமான அமீர் அலி இந்தச் சபையில் 'கிழக்கின் உதயம்' குறித்து அப்பட்டமான பல பொய்களை இங்கு கூறினார். அது மக்களை தவறாக வழிநடத்தும் செயலாகும்.

தென்பகுதி சிங்கள மக்களை கவர்ந்து தன்பக்கம் வைத்துக்கொள்ளும் நோக்குடன் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை முன் வைத்துள்ளார்.



முன்னைய அரசுகள் எதுவாக இருந்தாலும் போர் நடவடிக் கைகளைக் காட்டியே சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று அரசியல் நடத்தி வந்துள்ளன.

நாட்டின் அபிவிருத்திக்காக சமர்ப்பிக் கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இது என்றும் கூறப்பட்டாலும் வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு அதில் எதுவும் குறிப்பிடப்பட வில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எம்மால் எமது பிரதேசங்களுக்குச் செல்ல முடியவில்லை. எமக்குப் பாதுகாப்பு வழங்க அரசு முன்வரவில்லை.

ஆனால், உலக நாடுகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதாக பஸில் ராஜபக்ஷ பம்மாத்துக் காட்டுகின்றார் - என்றார் அவர். (சி)

# புலிகளுடன் தொடர்பென ஈழத்தமிழர் கைது!

திருவனந்தபுரம்,நவ.14

திருவனந்தபுரத்திலிருந்து இலங்கை ஊடாக கனடா செல்ல முயன்றார் எனத் தெரிவிக்கப்படும் இளைஞர் மீண்டும் திருவனந்தபுரம் திரும்பி வந்த நிலையில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி 15 தடவைகள் விமானப் பயணத்தை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படும் குறித்த இளைஞருக்கு விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸார் மத்தியில் எழுந்துள்ளது.

கேரளமாநிலம் - திருவனந்தபுரத்திலிருந்து இலங்கை வழியாக கனடா செல்லும் விமானத்தில் சுகுணகுமார் என்பவர் பயணம் செய்தார். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவரது கடவுச்சீட்டு பரிசோதனை செய்யப்பட்டவேளை அது போலியானது எனத் தெரியவந்தது.

இதையடுத்து சுகுணகுமார் திருவனந்தபுரம் திருப்பி அனுப்பப்பட்டார். இங்கு சுகுணகுமாரிடம் பொலிஸ் விசாரணை நடத்தியது.

மேலதிக விசாரணைக்காக சுகுணகுமார் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# பயங்கரவாதத்துக்கும் பிரிவினைக்கும் அரசு முன்வைக்கும் மாற்றுத்திட்டம் என்ன?

## மெக்ஸிக்கோ மாநாட்டில் சந்திரிகா கேள்வி



கொழும்பு, நவ. 14

''இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவேண்டும். ஆனால், பயங்கரவாதத்துக்கும் பிரிவினைக் கோரிக்கைக்கும் மாற்றாக அரசு முன்வைப்பது என்ன? அந்த மாற்றுத்திட்டத்தை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

- இப்படிக் கூறியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

மெக்ஸிக்கோவில், மொண்டோரி என்ற இடத்தில் கலாசாரத்துக்கான பிரபஞ்ச கூட்டமைப்பின் நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''நாட்டில் வசிக்கும் பல்வேறு சமூகங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும், புன்முகத் தன்மையையும் மேம்படுத்தி, அபிவிருத்தி செய்து, நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளும், அத்துடன் பரந்த - விசாலமான - அதிகாரப் பகிர்வுமே இதற்கு சாத்தியமான ஒரே வாய்ப்பு என நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.'' - என்றும் அங்கு சந்திரிகா குறிப்பிட்டிருக்கிறார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. (சி)

# மரணத்தை முன்கூட்டியே அறிந்து இறுதிச் சடங்கு செய்த முதியவர்!

அவினாசி,நவ.14

உயிருடன் இருக்கும்போதே தனது உயிர்பிரியும் தருணம் அறிந்து தனக்குத் தானே இறுதிக்கிரியைகளை வயோதிபர் ஒருவர் மேற்கொண்ட அதிர்ச்சிச் சம்பவம் தமிழகத்தின் அவினாசி என்னும் இடத்தில் அரங்கேறியது.

மனித வாழ்க்கையில் மரணம் எப்போது ஏற்படும் என்பது யாருக்கும் தெரியாதது. ஆனால், தனக்கு மரணம் நெருக்கி விட்டதை அறிந்து கொண்ட ஒருவர், இறந்த பின்னர் செய்யவேண்டிய சடங்குகளுக்கான ஏற்பாடுகளை செய்துகொண்ட ஆச்சரியம் நடந்துள்ளது.

அவினாசி, சக்தி நகரைச் சேர்ந்தவர் பழனிசாமி (வயது - 75) ஓய்வுபெற்ற தமிழாசிரியர். தனது குடும்பத்துடன் வசித்து வந்த பழனிசாமி, கடந்த சில நாள்களாக உடல் நலமில்லாமல் இருந்துவந்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை தனது குடும்பத்தாரை அழைத்த அவர், தன்னை வீட்டுஹோலில் கொண்டுசென்று படுக்க வைக்கக் கூறியுள்ளார். தலைமாட்டில் அகல் விளக்கு மற்றும் ஊதுபத்தி கொளுத்தி வைக்கவும், தனது நெற்றியில் திருநீறு பூசி, திருநீறுப் பொடியை தனது தலை மாட்டில் வைக்கவும் கூறியுள்ளார். அதன் பின், காலை 8 மணிக்கு அவர் உயிர் பிரிந்தது.

பழனிசாமி முன்கூட்டியே தனது மரணத்தைக் கூறியது, உறவினர்களுக்கு அதிர்ச்சியும், வியப்பையும் ஏற்படுத்தியது.

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

## (15.11.2007 முதல் 29.11.2008 வரை) - சோதிடர் கிருஷ்ணா.

### துலாம்

சித்திரை 3, 4, சுவாதி 1-4, விசாகம் 1-3

2 ஆவது ராசியில் இருந்த குருபகவான் 3இல் போகிறார். வருமானங்கள் கூடும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் வரும். சகோதரர் வழி வருமானங்கள் கூடும். குருவின் பார்வை 7,9,11 இல் விழுவதால் சில நன்மைகள் சேரும். எதிரிகள் குறைவர். உடல் நிலை தேறும். கணவன், மனைவி உறவு நன்றாகும். சிலருக்கு திருமணங்கள் கைகூடும். தடைப்பட்ட திருமணங்கள் நடக்கும். தகப்பனார் வழி வருமானங்கள் கூடும். ஸ்தல யாத்திரை, பெரியவர்கள் தரிசனம் கிடைக்கும். கடன்கள் தீரும். ஆடை, ஆபரணங்கள் வாய்ப்பு கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் தீரும். சிலருக்கு வெளிநாட்டு வேலை கிடைக்கும். வெளியூர் பிரயாணங்கள் நன்மைதரும். மக்களின் கல்வி சீரடையும். அவர்களின் செலவுகள் கூடும். தொழிலில் பெரிய திருப்பங்கள் ஏற்படும். லாபம் கூடும். தொழிலாளர்கள் பிரச்சினை தீரும். புதிய தொழில்கள் துவங்க சிலருக்கு வாய்ப்புக் கிடைக்கும். வீடு வாங்க வாய்ப்பு வரும். பலவித வருமானங்கள் வர வாய்ப்பு உண்டு. பூர்வீக சொத்துக்களில் இருந்த வழக்குகள் சிலருக்கு நன்மை தரும். சிலர் கோயில்கள் கட்ட நிதி உதவுவார்கள். சூரிய வழிபாடு, தட்சணாமூர்த்தி வழிபாடு நன்மை தரும். எதிரிகள் மறைமுகமாகத் தாக்குவர். மைத்துனர் வழி செலவுகள் கூடும். அவர்கள் பிரச்சினைகளைத் தருவார்கள். சிலரின் குழந்தைகளுக்கு படிப்பில் முன்னேற்றம், பண உதவிகள், பரிசுகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. புது வாகனங்கள் வாங்குவது உகந்ததல்ல. பழைய வாகனங்கள் வாங்க யோகமுண்டு. மன நிம்மதிக்கு மகிடாசுரமர்த்தினி சுலோகம் படிக்கவும். அதிர்ஷ்ட திகதிகள் 3,6, 12,9,15,18,24

பெண்களுக்கு:- உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி சிறப்பாக இல்லாததனால் தெய்வ வழிபாடு, சில பரிகார நிவர்த்தி மூலம் காரிய சித்தி உண்டாகும். இந்த 3 ஆம் இட குரு பணக் கஷ்டத்தையும், மனக் கஷ்டத்தையும் தருவார். உங்களது உடல் நிலையில் சின்ன சின்னத் தொந்தரவுகள் மூலம் மருத்துவச் செலவுகள் செய்ய வேண்டி வரும். அடிக்கடி தேவையில்லாத பிரச்சினைகள், தொந்தரவுகள் வரலாம்.கவனமாக இருப்பது நன்று. மன நிம்மதி இல்லாமல் குழப்பங்கள் வரலாம். எந்தக் காரியம் ஆனாலும் இழுத்துக் கொண்டே போகும். உத்தியோகத்திற்கு போகும் பெண்களுக்கு சில தொந்தரவுகள் வரலாம். எந்த சுப காரியமானாலும் தடைபட்டுக் கொண்டே இருக்கும். வியாழனுக்கு சாந்தி செய்வது நல்லது. வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து குருபகவானுக்கு நெய் தீபமிட்டு வணங்குவது சிறப்பபைத் தரும்.

மாணவர்களுக்கு:- இந்த குரு பெயர்ச்சி நீங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு சிறப்பைத் தராது. படிப்பில் கவனம் இல்லாமல் உங்கள் எண்ணங்கள் வேறு சிந்தனையில் இருக்கும். கண்டிப்பாக இறைவழிபாடு அவசியம். படிப்பில் தடைகள் ஏற்படலாம். கவனமாக இருப்பது நன்று. தேவையில்லாத பிரச்சினைகளில் தலையிட்டு வீண்பழி, கெட்ட பெயர் வரும் வாய்ப்புகள் அதிகம். சில மாணவர்களுக்கு படிப்பைப் பாதியில் நிறுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் வரலாம். எனவே குரு வழிபாடு மிக மிக அவசியம்.

அரசாங்க வேலை செய்வோருக்கு:- இந்த குரு பெயர்ச்சி மந்தமாகவே இருக்கும். 3 ஆம் இட குருவால் உயர்வும் இல்லை, தாழ்வும் இல்லை என்கிற நிலை வரும் வாய்ப்புகள் அதிகம். சில காரியங்களால் சிக்கல்கள் ஏற்படலாம். எந்த செயலில் இறங்கினாலும் தடங்கல்கள் வரும் வாய்ப்புகளே அதிகம். அரசாங்க காரியங்கள் கூட உடனடியாக நடக் காமல் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கும். சில பேருக்கு இடமாற்றத்தினால் குடும் பத்தைப் பிரிந்து செல்லும் வாய்ப்புகள் காணப்படுகிறது. சில நேரம் பெண்களால் தொந்தரவுகள் வரலாம். எனவே கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பது நல்லது. மொத்தத்தில் இது சோதனை மிகுந்த காலமாகவே இருக்கும். தெய்வ வழிபாடு மூலம் ஓரளவு நிம்மதி காணலாம்.

சொந்தத் தொழில் செய்பவருக்கு:- இந்தக் குரு பெயர்ச்சியில் ஓஹோ என்று இல்லாவிட்டாலும் உங்களுக்கு நிம்மதி கிடைத்தால் போதும் என்று இருக்கும். தொழிலில் பாதிப்புகள் வரலாம். பண நஷ்டம் வரும் வாய்ப்புகள் அதிகம். உங்கள் முயற்சிகளிலெல்லாம் முட்டுக் கட்டைகள் வரலாம். எச்சரிக்கையோடு இருப்பது நன்று. செய்யும் தொழிலைக் கூட தெய்வாதீன்மாக செய்வது நன்று. ஏனெனில் நஷ்டங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஒரு சிலருக்கு தொழிலில் வேலையாள்களால் கூட பிரச்சி னைகள் வரலாம். 10.05.2008 முதல் 07.09.2008வரை வியாபாரம் நன்றாக நடந்து ஓரளவுக்கு இலாபம் காணலாம். இந்த கால கட்டத்தில் பொறுமையோடு இருந்து தொழில் செய்யலாம். உங்கள் இஷ்ட தெய்வங்களின் வழிபாட்டின் மூலம் மன நிம்மதியும், தொழில் முன்னேற்றமும் காணலாம்.

# காணியை உரிமை மாற்றி மோசடி:

# சந்திரிகாவுக்கு எதிரான மனுவை விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்றது

கொழும்பு,நவ.14

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதி அமைச்சராக இருந்தபோது காணி ஒன்றை அரசுக்கென ஆகக்குறைந்த விலைக்கு சுவீகரித்துவிட்டு, பின்னர் அதனை தனியார் நிறுவனம் ஒன்றுக்கப் பெருந்தொகை பணத்துக்கு விற்று மோசடி செய்யப்பட்டது எனத் தெரிவித்து சந்திரிகா உட்படப் பலருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட - பொதுநலன் நோக்கம் கொண்ட - அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

கஹபால மெண்டிஸ், ஆர். என்.பி. சேனநாயக்க என்ற இரண்டு ஓய்வுபெற்ற அரச ஊழியர்களே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

சுமார் பதின்மூன்றரை ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்தக் காணி நகர அபிவிருத்தி என்ற பெயரில் ஒரு பேர்ச் 312 ரூபா என்ற மதிப்பீட்டில் - ஆகக்குறைந்த விலையில் - தனியாரிடமிருந்து கடுவெல பிரதேச அபிவிருத்திக்கென சுவீகரிக்கப்பட்டது.

ஆனால், பின்னர் அது வெளிநாட்டு கோல்வ் நிறுவனம் ஒன்றுக்கு விற்கப்பட்டது. இதில் பெரும் தொகைப் பணம் மறைமுகமாக கைமாறியிருக்கின்றது என மனுதாரர்கள் குற்றம் சுமத்தியிருக் கின்றனர்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு பிரதம நீதியரசர் சரத் என்சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, ஜகத் பாலபட்ட பெண்டி ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுவை விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இந்தக் காணியின் உரிமை மாற்றங்கள் இடம்பெற்ற சமயம் நகர அபிவிருத்தி அமைச்சர்களாக இருந்த மங்கள சமரவீர, இந்திக குணவர்த்தன மற்றும் முதலீட்டு சபைத் தலைவர் திலான் விஜேசிங்க ஆகியோரை இந்த மனுக்களில் எதிர் மனுதாரர்களாகச் சேர்ப்பதற்கு அனுமதி அளித்த நீதிமன்றம் மனு மீதான மேல் விசாரணையை பெப்ரவரி 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (சி)



புங்குடுதீவு, வடலித்தோட்டம் வீதி புனரமைப்புப் பணிகளை யாழ்.மாவட்ட கிராம அபி[illegible] தொடக்கி வைப்பதையும் பெருங்காடு கிழக்கு கிராம அபிவிருத்திச் [illegible] ஜே.பூராசா மற்றும் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி சரணம் ஐயப்பா

## யாழ். கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்

## வருடாந்த மகர ஜோதி மண்டல பூஜை மகோற்சவப் பெருவிழா - 2007

சபரிமலை யாத்திரைக்குழு

நிகழ்வு

விரத ஆரம்பம்: கார்த்திகை முதலாம் நாள் (17.11.2007)

தொடர்ந்து 60 நாள்களும் காலை தினமும் கணபதி ஹோமம், பிற்பகல் 2 மணிக்கு அபிஷேகம், படிப்பூஜை, பஜனை நடைபெறும். எதிர்வரும் 3.12.2007 மஹோற்சவம் ஆரம்பம் (கொடியேற்றம்) விரதமிருந்து மாலை அணியும் பக்தர்கள் முன் கூட்டியே தொடர்பு கொள்ளவும். பூஜைப் பொருள்களை ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தேவஸ்தானம்
குருசுவாமி.

(67885)

## YMCA 2008 ஆம் ஆண்டுக்கான கேள்விக் கோரிக்கை

யாழ்.வை.எம்.சீ.ஏ. கட்டடத்தில் அமைந்துள்ள

01. சிற்றுண்டிச்சாலை
02. கடை (கச்சேரி - நல்லூர் வீதி)
03. கடைத்தொகுதியின் கீழ்க் கடை (Ground floor)
04. கடைத்தொகுதியின் 2ஆம் மாடி கடை (2nd floor)

என்பவை குத்தகைக்கு கொடுக்க கேள்விக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முடிவுதிகதி: 26.11.2007

கோரிக்கைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

**Y.M.C.A.**

*109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

(சீ/54342) பொதுச்செயலாளர்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் -கரவெட்டி
(மட்டுப்படுத்தப்பட்டது பதிவு இல. J/1553)

## இரண்டாவது பகிரங்க அறிவித்தல்


கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் நீண்டகாலமாக (1995ஆம் ஆண்டுக்கு முன்) எண்பார்வை அறிக்கைகளில் வருமதியாகவும், செல்மதியாகவும் காட்டப்பட்டுவரும் மீதிகளில் இதுவரை கோரப்படாமலும், விவரம் பெறப்படாமலும் இருக்கும் மீதிகளை அழித்தெழுத நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது தொடர்பில் சங்கத்தால் பெப்ரவரி 2006ஆம் ஆண்டில் குடாநாட்டுப் பத்திரிகைகள் மூலம் செய்யப்பட்ட முதலாம் அறிவித்தலுக்கு மேலாக இப்பகிரங்க அறிவித்தல் இறுதியாகத் தரப்படுகிறது.

மேற்படி வருமதி செல்மதிகளுடன் தொடர்புடையவர்கள் எதிர்வரும் 30.11.2007இற்கு முன்னர் சங்கத்துடன் தொடர்புகொண்டு சங்கப் புத்தகங்களில் தங்கள் கணக்குகளில் உள்ள மீதிகளைச் சீர்செய்யப்படாத விடத்து இந்த அறிவித்தலின் அடிப்படையில் கணக்குகள் அழித்தெழுதப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

(சீ/54345) பொதுமுகாமையாளர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண
உயர்தொழில்நுட்ப நிறுவன
சிரேஷ்ட விரிவுரையாளர்

### சிவகுரு உமாகாந்தன்

அவர்கள் 11.11.2007 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்.

(67905)

## தேவை

அனுபவமுள்ள காவலாளி, சமையல் ஆள் உடன் தேவை

தொடர்பு:

**கொனிக்கா கலர் லாப்**

14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி (பெருமாள் கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்.

(சீ/54346)

## டுபாயில் வெற்றிடங்கள்
## யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

### விதிகளும் நிபந்தனைகளும்

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள, நாளொன்றுக்கு எட்டு(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் இருவழி விமானப் பயணச் சீட்டு வழங்கப்படும். நன்னடத்தைக் காலவரை 90 நாட்கள்.

* வங்கிக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.

• 3வாரங்களுக்குள் பயணம்.

நேர்முகப் பரீட்சைகள் நவம்பர் 20 வரை
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

* உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

**அராபியன்றோயல்குறூப் (பிறைவேட்) லிமிடெட்**
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் ரோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

01. மருதமுனை - 03. தொலைபேசி: 077-6968684/077-9027572
02. ஆரையம்பதி - 01. தொலைபேசி: 077-9911503/065-2247715
03. பெரியபோரதீவு(பங்கியடியூற்று) தொலைபேசி: 077-5000474/065-4921964
04. மருதமுனை - 04. தொலைபேசி: 077-7405996/067-2220877
05. கிரான்குளம் -08. தொலைபேசி: 077-5024029/060-2641572
06. குராவத்தை. தொலைபேசி: 077-524554/077-3405643
07. [illegible] சங்கானை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 011 2514005

## சங்கானை பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

மானிப்பாய்,நவ.14

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கென பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபாவை சமூக சேவைகள் அமைச்சு ஒதுக்கியுள்ளது.

சங்கரத்தைப் பகுதியில் உள்ள வழுக்கியாற்று வேலைத்திட்டத்தை மேற்கொள்ள ஒரு லட்சம் ரூபாவும் - வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் பொதுமக்களுக்கான குடிதண்ணீர்க் கிணறு அமைப்பதற்கு 60 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இப்பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருவாசக முற்றோதல்

சுழிபுரம்,நவ.14

சிவபூமி அறக் கட்டளையினர் தொல்புரம் வழக்கம்பரையில் நடத்தும் முதியோர் இல்லத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வை மாதம் தோறும் நடத்த பஜனைச் சபையார் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

ஒவ்வொரு தமிழ் மாத முடிவிலும் காலை முதல் முற்றோதல் நடத்த உள்ளனர். (292-28)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2007இல் 154 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்த கொழும்பு இந்துக் கல்லூரி மாணவன்

செல்வன் ஜெயக்குமார் இரகுவர்மன்

அவர்கள் பல்கலைகளும் கற்று மேலோங்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: அப்பப்பா, அப்பம்மா (கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் செல்லையா சட்டத்தரணி), அம்மா (முன்னாள் ஆசிரியை, கரசாய் அ.த.க. வித்தியாலயம்), அப்பா (தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை, கொழும்பு), லண்டனைச் சேர்ந்த சிறீந்திரன் குடும்பம், வசந்தகுமார் குடும்பம், பிரான்ஸ் சாந்தலிங்கம் குடும்பம், வெள்ளாம்போக்கட்டி டாக்டர் கந்தையா குடும்பம், இந்திரகுமார் குடும்பம், கொழும்பைச் சேர்ந்த செல்வராணி குடும்பம்.

(67881) வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா பனங்கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No.228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சீ/54169) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

## யூனிவேர்சல் கல்வி நிலையம்

நடத்தும் அணிக்கு 7 பேர், 6 பந்துப் பரிமாற்றம் கொண்ட மாபெரும் மென்பந்துத்

### துடுப்பாட்டப் போட்டி

விண்ணப்ப முடிவுதிகதி: 20.11.2007

முதலாம் இடம் -
ரூ. 3000 பணப்பரிசு, வெற்றிக்கிண்ணம்
இரண்டாம் இடம்-
ரூ.2000 பணப்பரிசு, வெற்றிக்கிண்ணம்

விண்ணப்பப் படிவம்:

ஹரிகா தையலகம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

அபர்ணா வீடியோ சென்ரர்,
ஒலிம்பிக் மைதான முன்புறம், திருநெல்வேலி.

யூனிவேர்சல் கல்வி நிறுவனம் (சனி, ஞாயிறு)
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகே.

(67892) - நிர்வாகி.

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies
## New Admissions
## Academic Year - 2007/08

Applications are invited from suitably qualified applicants for admission to the following fee levying courses conducted by the Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely.

1. M.A. in Regional Planning
2. M.A. in Development Studies
3. M.A. in Population Development Studies
4. Master of Education (M.Ed.)
5. Post graduate Diploma in Library and Information Science

**Admission Requirements:**

For courses other than M.Ed., admission is open to all graduates of any recognized university or those with any other qualifications and/or experince, which would be acceptable to the Senate of the University of Jaffna.

For the M.Ed. course,
Admission is open to all graduate teachers possessing Postgraduate Diploma in Education/ B.Sc. with Education/ B.Ed. degree of any recognized university.

**Duration:** One Year

Lectures will be conducted on Saturdays and Sundays.

**Medium:** Tamil

**Method of Selection:**

For courses other than M.Ed., by an Interview conducted by the University of Jaffna.

For the M.Ed. course,
Selection to the course will be made on the basis of a written test and/ or an interview conducted by the University of Jaffna.

**Course Fee:** Rs. 35,000/=

Application forms and other details may be obtained from the Office of the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on payment of Rs. 100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of "The Bursar", University of Jaffna, Thirunelvely together with a self-addressed, Rs. 15.00 stamped envelope of size 23x10 cm.

Duly completed application forms should be sent under registered cover to reach the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely on or before 15.12.2007.

Incomplete & ineligible applications and applications received after the closing date will be rejected.

**Registrar,**
**12.11.2007** (C/54336)

## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Siraimbiyadi Lane, Jaffna *Branch*: #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~8,250~~/= 1,650/= |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :

Batch I :16/11/2007 10AM
Batch II :17/11/2007 09AM
Batch III :18/11/2007 09AM
Batch IV :21/11/2007 10AM

November 30 ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்களை அத்தியாவசியமான பதவிகளில் நியமிக்கலாம்

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.14

மாகாண சபைகள், அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்கள் என்பனவற்றில் நிலவும் அத்தியாவசியமான பதவி வெற்றிடங்களுக்கு மட்டும் ஓய்வுபெற்ற அரச அலுவலர்களை மீளச் சேவையில் அமர்த்தலாம் என அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக 09/2007(1) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை ஒன்றை அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க சகல திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களின் தலைவர்களுக்கும் மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் ஓய்வுபெறுநர் - 60 வயதைக் கடந்த - ஒருவர் மீளச் சேவையில் அமர்த்தப்படுதலாகாது.

எனினும் பதிலாளர் ஒருவரை நியமிக்க முடியாதவிடத்து, அத்தியாவசியமான பதவிகளுக்கு மட்டும் தொடர்புடைய அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட பரிந்துரையின் பேரில் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவரை ஆகக்கூடிய 12 மாதங்கள் வரையறையின் கீழ் நியமனம் செய்யலாம்.

ஆனால், எக்காரணத்தை முன்னிட்டும் 67 வயதைப் பூர்த்தி செய்த ஒருவரை அரச சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றில் நியமனம் செய்தலாகாது - என்று அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

# குடாநாட்டில் 24 மணி நேரத்தில் 46.5 மில்லிமீற்றர் மழை பதிவு

நல்லூர், நவ.14

நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் குடாநாட்டில் 46.5 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதென திருநெல்வேலி வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையான நேரத்திலேயே இம்மழை பதிவாகியுள்ளது.




கடந்த சனிக்கிழமை 7.6 மில்லி மீற்றர் மழையும் ஞாயிற்றுக்கிழமை 1.1 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளன.

இந்த பருவ காலத்தில் இதுவரை குடாநாட்டில் 692.3 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. நவம்பர் மாதத்தில் இன்று காலைவரை 91.1 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது.

குடாநாட்டில் நவம்பர் மாதத்தில் சராசரியாக 336.1 மில்லி மீற்றர் மழை பெய்வது வழக்கம். - என்றும் திணைக்களம் தெரிவித்தது. (202-111)

## சூரன்போர் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.13

முருகன் ஆலயங்களில் நாளை வியாழக்கிழமை சூரன்போர் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. வல்வை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் நாளை சூரன்போர் இடம்பெறும்.

* * *

தம்பசிட்டி மாயக்கை சித்தி விநாயகர் ஆலயம் மற்றும் புலோலி வடமேற்கு ஸ்ரீ முருகன் ஆலயம், துன்னாலை அல்லையம்பதி சிவசுப்பிரமணிய ஆலயம் ஆகியவற்றிலும் சூரன்போர் நாளை பிற்பகல் இடம்பெறும். (160)

* * *

சாவகச்சேரியில் உள்ள முருகன் ஆலயங்களில் கந்தசஷ்டி விரத பூசைகள் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்த ஆலயங் களில் நாளை சூரன்போர் இடம்பெறும். (207)

# பொதுமக்களின் தேவையை இலகுபடுத்த 'குடிமக்கள் உரிமைப் பட்டயம்' நடைமுறையில்

யாழ்ப்பாணம்,நவ.14

பொதுமக்களுக்கான சேவை, அவர்களை முழுமையாகச் சென்றடைய குடிமக்கள் உரிமைப்பட்டயம் (Citizens Charter) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ்.அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

'பொதுமக்கள் உரிமைப் பட்டயம்' எனும் தலைப்பில் இவ்விடயம் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர், உதவி அரச அதிபர் ஆகியோர் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் தமது தேவைகளை இயன்றவரை இலகுவாகவும் விரைவாகவும் அரசாங்க அலுவலங்களில் நிறைவேற்றிக் கொள்வதை உறுதி செய்யவே இந்த உரிமைப் பட்டயம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொதுமகனும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேண்டிய விண்ணப்பங்களை முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும்.

பின்னர் அச்சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கு செலவிட வேண்டிய நேரம் அறிவிக்கப்படும்.

அதன் ஊடாக அவர்களது தேவைகள் ஆராயப்பட்டு முழுச் சேவை வழங்கப்படும்.

மேலதிக நேரத்தைக் குறிப்பிட்ட சேவைக்கென செலவிடப்பட நேரிடின் உரிய முறைப்படி திணைக்களத் தலைவருக்கு முறைப்பாடு செய்யும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-95)

## நுளம்புவலை தீப்பிடித்து வயோதிபப் பெண் காயம்

யாழ்ப்பாணம்,நவ.13

படுக்கைக்கு விரிக்கப்பட்டிருந்த நுளம்புவலையில் நெருப்புப் பிடித்து அதனுள் நித்திரையிலிருந்த வயோதிபப்பெண் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை தெற்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஐயன் தெய்வானை (வயது 74) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202-207)



புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளையினால் 'சிசு உதான' வங்கி அலகு அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் அ.குகதாசன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதை முதலாவது படத்திலும் - பாடசாலை மாணவர்களின் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## தென்மராட்சியில் 4ஆம் தரப் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம்,நவ.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 4 வகுப்புகளுக்கான சுற்றாடலும் செயற்பாடும் பாடப்பயிற்சிப் பரீட்சை இன்று புதன்கிழமை நடைபெறும்.

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1-207)

## ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத் தலைவர் இறையடி சேர்ந்தார்

ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் உலகளாவிய சங்கத்தின் 14 ஆவது தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஹகளானந்தர் மகராஜ் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்கத்தாவில் இறையடி சேர்ந்தார்.

சுவாமிகளின் மகா சமாதியையொட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் விசேட வழிபாடு இடம்பெறவுள்ளது.

அத்துடன் கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியில் எதிர்வரும் 18ஆம் திகதி மாலை 4 மணிக்கு விசேட பிரார்த் தனை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (203)

## மானிப்பாய் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.14

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் கிராம உப அலுவலகத்தின் ஏற்பாட்டில் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக சுதுமலை, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், நவாலி ஆகிய பகுதிகளில் பிரதேச சனசமூக நிலையங்களின் அனுசரணையுடன் சிரமதானம் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலுக்கு அருகாமையிலும் 23ஆம் திகதி சண்டிலிப்பாய் கல்வளை வீதியிலும் சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. (202)

# உடுப்பிட்டி வடக்கில் உற்பத்திசெய்யப்பட்ட வெங்காயம் சந்தைப்படுத்தமுடியாது தேக்கம்

யாழ்ப்பாணம்,நவ.14

உடுப்பிட்டி வடக்கில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் சந்தைப்படுத்தல் வசதியின்றி தேங்கியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு, நாவலடி, கம்பர்மலை, கொம்மாந்தறை ஆகிய பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயமே இவ்வாறு சந்தை வசதியின்றித் தேங்கிக் கிடக்கின்றது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் - ஏ-9 பாதை மூடப்பட்டதால் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடியே விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் ஒவ்வொருவரினதும் வீட்டிலும் 5 முதல் 25 அந்தர் வரையிலான வெங்காயம் சந்தைப்படுத்தல் வசதியின்றி 'பொச்சு' பிடித்துள்ளதாகவும்-

பாதிக்கப்பட்ட விவசாயிகள் அதனை கேட்கும் விலைக்கு விற்றுத் தீர்த்துவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இப்பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகள் கையொப்பம் இட்டு பருத்தித்துறை பிரதேச செயலர் ஊடாக அரசாங்க அதிபருக்கு மகஜர் சமர்ப்பிக்கவுள்ளதாக உடுப்பிட்டி வடக்கு பிரதேச முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் தே.பிரசாத் தெரிவித்துள்ளார். (202-95)

## தென்மராட்சியில் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு சிமெந்து

யாழ்ப்பாணம்,நவ.13

தென்மராட்சி பிரதேசத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டங்களின் பயனாளிகளுக்கு சிமெந்து வழங்கப்படவுள்ளது.

இதற்கென ஒரு தொகுதி சிமெந்து பைக்கற்றுக்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் உலக வங்கியின் உதவியுடன் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் 400 வீட்டுத் திட்டங்களுக்குப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# துணுக்காய் வலய ஆசிரியர்களுக்கு இரண்டு மாதங்களுக்குரிய சம்பளம்

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இரண்டு மாதங்களுக்குரிய சம்பளம் யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்குரிய சம்பளமே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய கல்வி வலய ஆசிரியர்களுக்கு ஏற்கனவே குறிப்பிட்ட மாதங்களின் சம்பளம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் சம்பளம் வழங்கப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-207)

# யாழ்.பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்திப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முன்பள்ளிகள், சனசமூக நிலையங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கென சமூக சேவைகள் அமைச்சு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

நாவாந்துறை நித்திய ஒளி சனசமூக நிலைய முன்பள்ளியின் புனரமைப்பு மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும் - குருநகர் சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் -

யாழ். றக்கா வீதி சனசமூக நிலையத்தின் தளபாடக் கொள்வனவு மற்றும் புனரமைப்புச் செயற்பாடுகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (202-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசாங்கத்துக்கு

# வெளிநாடுகள் ஆயுத உதவி செய்தாலும் நாம் பலவீனம் அடைந்துவிடமாட்டோம்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் சொல்கிறார்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழகத்திலிருந்து வெளிவரும் "நக்கீரன்" இதழுக்கு மின்னஞ்சல் மூலம் அளித்த பேட்டி இங்கு தரப்படுகிறது.**

*தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவு எப்படி நிகழ்ந்தது?*

அரசியல்துறையின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தயார்படுத்தல்கள், மக்கள் அமைப்புக்களுடனான சந்திப்புகள் என்பன இடம்பெறும் இடத்தில் அவர் தனது சக போராளிகளுடன் தங்கியிருந்தபொழுது சிறிலங்கா அரசின் விமானப்படையின் குண்டுவீச்சுக்கு இலக்காகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இச்சம்பவம் இடம்பெற்ற இடம் ஓர் இராணுவ அலுவலகமோ, அல்லது படைத்துறை சார்ந்த அலுவலகமோ அல்ல. முற்றுமுழுதாக அரசியல் பேச்சுகள் தொடர்பாக மக்கள் அமைப்பு களைச் சந்திக்கும் இடமாகும். கிபிர், மிக் போன்ற நவீன போர் விமானங்கள் தொடர்ச் சியாக ஏராளமான குண்டுகளை வீசி இப் பேரவலத்தை விளைவித்தன.

*சு.ப. தமிழ்ச்செல்வனின் மறைவு என்பது அமைதிவழிப் பேச்சுகளுக்கான ஒரு பின்னடைவு என்று கூறப்படுகி றதே?*

ஆம். தொடர்ச்சியாக எல்லாப் பேச்சு வார்த்தைகளிலும் கலந்து கொண்டு வருபவர். அரசுத் தலைவர்கள், இராஜ தந்திரிகள் என்போருடன் தமிழ் மக்களின் பிரச்சினையை விளக்கமாக எடுத்துக் கூறிவருபவர். பேச்சுவார்த்தையில் அனுபவம் உள்ளவர். இவ்வாறான ஒருவரைக் குண்டு வீசி அழிப்பதென்பது பேச்சுவார்த்தைக்கு ஒரு பின்னடைவே.

*அரசியல்துறையில் சு.ப.தமிழ்ச்செல்வனின் செயற்பாடுகள் குறித்த உங்களின் கருத்துகள் என்ன?*

அரசியல்துறையில் மிக ஆற்றலுடன் மதி நுட்பமாகச் செயற்பட்டவர். கடந்த 14 வருடங்களாகத் தமிழீழத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்து செயலாற்றி நிறைய அனுபவங்களைப் பெற்ற பொறுப்பாளராவார். அரச தலைவர்கள், இராஜ தந்திரிகள் எனப் பல சர்வதேச பிரமுகர்களுடன் அரசியல் பேச்சுகளை இராஜதந்திர ரீதியாக எடுத்துச் சென்று விளக்குவதில் வல்லவர். தமிழீழப் போராளிகள், பொது மக்களுடன் மிக அன்பாகவும் பண்பாகவும் புன்சிரிப்புடனும் பழகி அவர்களின் இதயங்களை வென்றவர். தளபதிகள், போராளிகள், பொறுப்பாளர்கள் அனைவரும் அவர் மீது மிகுந்த அன்பையும், பாசத்தையும் வைத்திருந்தனர்.

*தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் துறையின் பொறுப்பாளராக இருக்கும் உங்களுக்கு அரசியல் துறைப் பொறுப்பும் கூடுதலாக வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டு பொறுப்புகளையும் நீங்கள் முன்னெடுத்துச் செல்லமுடியுமா?*

நான் அரசியல்துறைப் பொறுப்பாளராக மட்டுமே செயற்படுவேன். காவல் துறைப் பொறுப்பிற்கு எமது தலைமைப் பீடத்தால் வேறு ஒருவர் வெகுவிரைவில் நியமிக்கப்படுவார்.

**நாம் பலவீனமுறமாட்டோம்**

*இலங்கை அரசுக்கு பல்வேறு நாடுகள் இராணுவ உதவி செய்து வருவதால் தமிழீழ விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து வருவதாகக் கூறப்படுகிறதே?*

அது முற்றிலும் தவறான கருத்து. கடந்த 25 வருடங்களிற்கு மேலாகப் பல்வேறு நாடுகள் இராணுவ உதவிகளைச் செய்து வந்தாலும் சிறிலங்கா அரசால் எம்மை வெல்லமுடியவில்லை. ஆனால் எமது விடுதலை இயக்கம் மக்கள் மயப்பட்டு, மக்கள் விடுதலை இயக்கமாக, தேசிய இயக்கமாகப் பரிணாமம் பெற்று வளர்ச்சி கண்டுள்ளதால் யார் எந்த உதவியைச் சிறிலங்கா அரசிற்கு வழங்கினாலும் நாம் பலவீனமடையமாட்டோம்.

*பாலசிங்கம் மற்றும் தமிழ்ச் செல்வன் மறைவுக்குப் பின்னர் புலிகள் தரப்பில் சர்வதேச சமூகத்தில் பரப்புரை செய்வதற்கு ஒரு தலைவர் இல்லை என்கிற கருத்து பற்றி உங்கள் நிலைப்பாடு?*

நாம் எல்லோ ரும் எமது தேசியத் தலைவர் அவர்களின் வழிநடத்தலின் கீழ் சகல துறைகளையும் பிரச்சினைகளையும் கையாளக்கூடிய முறையில் வழிநடத்தப்படுகின்றோம். இந்த வகையில் கடந்த காலத்தைப் போலவே எதிர்காலத்திலும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் எமது அரசியல் வேலைகளை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றல் எம்மிடமுண்டு.

*தமிழ்ச்செல்வனின் மறைவுக்குப் பழி வாங்கும் வகையில் பிரபாகரன் மிகப் பெரிய யுத்தம் ஒன்றை நடத் துவார் - அதுவே ஈழ விடுதலைப் போரின் இறுதி யுத்தமாகவும் இருக்கும் என்றும் தமிழகத்தில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அது பற்றி உங்கள் கருத்து?*

எமது மக்களும் மண்ணும் விடுதலை பெற்று சுபீட்சமான வாழ்வு அமையுமட்டும் எமது தலைவர் இந்த விடுதலைப் போரை வேகமாக முன்னெடுத்துச் செல்வார். அவரது வழிநடத்தலின் ஆற்றலும் வேகமும் வரவர அதிகரித்தே செல்லும். அவ்வாறானதொன்றையே இக்கேள்விக்கு என்னால் கூறமுடியும்.

*2008 தைப்பொங்கல் நாளில் தமிழீழ பிரகடனத்தை பிரபாகரன் வெளியிடப் போகிறார் என்று இலங்கை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அடிக்கடி கூறிவருகிறாரே அது உண்மையா?*

**எமக்கென ஒரு மூலோபாயம் உண்டு**

சிறிலங்கா அரச அமைச்சர்களின் இவ்வாறான கருத்துக்கள் அடிக்கடி வெளியிடப்படுவதுண்டு. நாம் எமது விடுதலையை வென்றெடுப்பதற்காக அதற்கான மூலோபாய வேலைத்திட்டம் ஒன்று இருக்கிறது. அதன்படியே எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

*தமிழ்ச் செல்வன் மறைவுக்காக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இரங்கல் தெரிவித்தார். அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழீழ தேசத்தின் மீதும் தமிழ மக்களின் மீதும் அளவிலா அன்பும், பாசமும் கொண்டவர். நாம் விடுதலை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதை விரும் புபவர். தமிழ் இனஉணர்வுமிக்கவர். கவிதை வடிவில் அவர் தெரிவித்த இரங்கல் செய்தி ஆறாத்துயரில் ஆழ்ந்தி ருந்த எம் எல்லோரையும் ஓரளவேனும் ஆறுதலடையச் செய்துள்ளது. அதற்காக நாம் அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



*தமிழ்ச்செல்வன் மறைவுக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இரங்கல் தெரிவித்ததை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எதிர்த்துள்ளார். அத்துடன் கருணாநிதியின் அரசைக் கலைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

தமிழக முதலமைச்சர், பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் மறைவையொட்டி தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆறரைக் கோடி தமிழ் மக்களின் உணர்வுகளையே தனது இரங்கல் செய்தி மூலம் பிரதிபலித்துள்ளார்.

**தமிழக அரசும் இந்திய அரசும் எமது விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்**

*தமிழகத்துடன் 1990 ஆம் ஆண்டு வரை நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவராக நாங்கள்அறிகிறோம். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எங்கள் மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் தமிழக மக்களிடம் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?*

தமிழக மக்கள் எமது உடன் பிறப்புக்கள். அவர்கள் எப்போதும் எம்முடன் இருப்பவர்கள். எமக்கு ஒன்றென்றால் அவர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றாகக் கொதித்தெழுவார்கள். அவர்கள் தொடர்ந்தும் எமது போராட்டத்திற்காக, நாம் விடுதலை அடையும்வரை எமக்காகக் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். தமிழக அரசும், மத்திய அரசும் எமது போராட்டத்தை அங்கீகரித்து எமது மக்களின் விடுதலையை வேகமாக வென்றெடுப்பதற்கு சகல அங்கீகாரங்களையும் எமக்குத் தர வேண்டும் என்று எதிபார்க்கின்றோம்.- என்றார் நடேசன்.


## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலை ஆசிரியை செல்வி கு.சிவசாமி
அவர்களின் அன்புத் தாயார்

**சிவசாமி திரவியம்**

அவர்கள் கடந்த 10.11.2007 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யா/பொன் பரமானந்தர் வித்தியாசாலை, குரும்பசிட்டி.

(67506)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 | 26 |
| 05 | 10 |
| 1952 | 2006 |



**அமரர் சிதம்பரப்பிள்ளை குலசிங்கம்**

(திதி: 14.11.2007)

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமா எம் துயரம் ஐயா!
எம் உயிர் உள்ளவரை
என்றென்றும் உமை மறவோம்
நாள்தோறும் பரமனை வேண்டுகின்றோம்
நற்கதியை உங்கள் ஆன்மா அடைந்திடவே.

நீண்டியாம்பத்தை,
புலோலி வட கிழக்கு, பருத்தித்துறை.

மனைவி, மக்கள்.






Office Automation Division
481 டி.பி.ஜயா மாவத்தை,
கொழும்பு-10

T : 2663444 F : 2694158
E : oasales@brownsgroup.com

உடன் விற்பனைத் தொடர்புகளுக்கு
0777 447137

Browns


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இனப்பிரச்சினையை மையமாக வைத்தே தெற்கின் அரசியல் அதிகாரப் போர்

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கங்கள் காலம் காலமாகத் தமக்கிடையேயான அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றன என்பதை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பலப்படுத்தி, நிலைப்படுத்துவதற்கு ஈழத் தமிழர் பிரச்சினையை மையமாகக் கொண்ட தமது அதிகாரப் போர்களையே தளங்களாக சிங்களத் தலைமைகள் பயன்படுத்தி வந்திருக்கின்றன. அதுவே இன்றும் தொடர்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதி முயற்சிகள் தென்னிலங்கையின் இந்த அதிகாரப் போர்கள் ஊடாக அணுகப்பட்டமையால்தான். இன்று வரை தீர்க்கப்பட முடியாத பெரும் விவகாரமாக இனப்பிணக்கு விஸ்வரூபம் எடுத்து, உள்நாட்டு யுத்தமாக வெடித்திருக்கின்றது.

'செல்லும் செல்லாது எல்லாம் செட்டியார் தலைமேலே' என்பார்கள். அதுபோல தென்னிலங்கை அரசியல் சிக்கல்கள், குளறுபடிகள் எல்லாவற்றையும் தலையில் கொட்டுவதற்கான நிலைக்களனாக இப்போது புலிகள் அமைப்பே தென்னிலங்கையால் பயன்படுத்தப்படுகிறது.

தென்னிலங்கைக்குள்ளேயே அரசுக்கு எதிரான எதிரணிகள் எழுச்சி பெற்று, கிளர்ச்சியுற்று, பெரும் ஆர்ப்பாட்டங்களை - பொதுக்கூட்டங்களை - பேரணிகளை - நடத்தத் திட்டமிட்டால், அதைத் தடுப்பதற்கும் வாய்ப்பாக மாட்டும் செட்டியார் புலிகள்தாம்.

வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட வாகனங்களுடன் புலிகளின் தற்கொலைத் தாக்குதலாளிகள் தலைநகருக்குள் புகுந்துவிட்டார்கள் என்று புரளி கிளப்பி, புலிகளின் பேரால், எதிரணியின் மக்கள் பேரெழுச்சிக்கு வேட்டு வைக்கும் நாடகம் அங்கு அரங்கேறும்.

இப்போதும் கூட, தென்னிலங்கையில் அரசியல் குழப்பம் உச்சக்கட்டம் அடைந்திருக்கிறது. அரசு சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பை ஒட்டிய வாக்கெடுப்பு அடுத்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெறும்போது அங்கு ஓர் அரசியல் அதிகாரப் போரும் வெடிக்கும் ஏதுநிலைகள் தென்படுகின்றன.

எதிரணியில் இருக்கும் பிரதான கட்சிகள் வெவ்வேறு காரணங்களுக்காக இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. வழமையாக எதிர்க்கட்சிக்குரிய பொறுப்பில் ஆட்சியைக் கவிழ்த்து அரசைக் கைப்பற்றும் நினைப்பில் - எதிர்பார்ப்பில் - இந்த வரவு, செலவுத் திட்டத்தை எதிர்க்கின்றது.

நாட்டில் என்றுமில்லாதவாறு மோசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் விலைவாசி உயர்வால் நாட்டு மக்கள் பெரும் அவதிக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியிருக்கின்றார்கள். போதாக்குறைக்கு தான் எதிர்பார்க்கும் வகையில் தமிழர் விரோதப் போரியலை முன்னெடுக்கும் தீவிரத்தை அரசு காட்டவில்லை என்ற காழ்ப்புணர்வும் சேர, இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்காமல் விடுவதன் மூலம் தனது எதிர்ப்பைக் காட்டத் திட்டமிடுகிறது - எண்ணுகிறது - ஜே.வி.பி. கட்சி. அத்தோடு வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பதன் மூலம், அல்லது அதை ஆதரிக்காமல் விடுவதன் வாயிலாக, இந்த மோசமான விலைவாசி அதிகரிப்புக்குத் தான் பொறுப்பல்ல என்றும், அத்தகைய மோசமான பொருளாதாரப் பின்னடைவுகளை ஏற்படுத்தியிருக்கும் அரசுக்குத் தான் முண்டு கொடுக்கவில்லை என்றும் காட்டுவதன் மூலம் தென்னிலங்கை மக்களின் வசவுகளிலிருந்து தப்பிக்கொள்ள ஜே.வி.பி. விரும்புகின்றது.

இதேபோன்ற அரசியல் காரணங்களுக்காக இச்சந்தர்ப்பத்தில் அரசைக் கவிழ்க்க ஸ்ரீ.ல.சு.கவின் மக்கள் பிரிவின் எம்.பிக்களான மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராய்ச்சி போன்றோர் விரும்புகின்றனர்.

அதேசமயம், மோசமான போர் ஒன்றைத் தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்து விடும் திட்டத்துடன் பெரும் யுத்த 'பட்ஜெட்' ஒன்றை அரசு சமர்ப்பித்திருப்பதால் அதனை எதிர்க்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இந்தப் பின்புலத்தில் அரசுத் தரப்பில் ஒட்டியும், ஒட்டாமலும் இருக்கும் சில கட்சிகளும், குழுக்களும் 19 ஆம் திகதி வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு வாக்கெடுப்பின் போது, அரசுத் தரப்பின் காலை வாரி எதிரணிப் பக்கம் நின்று, அரசுக்கு எதிராக வாக்களிக்கலாம் என்று பேச்சடிபடுகின்றது. இதனால் அச்சமயம் அரசைக் கவிழ்ப்பதற்கான வாய்ப்பு ஐம்பது வீதத்தை எட்டியிருக்கின் றது. அன்று எதுவும் நடக்கலாம் என்ற நிலைமை.

தென்னிலங்கை அரசியல் அதிகாரப் போர் இவ்வாறு உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டால் அடுத்து என்ன நடக்கும்? வழமைபோல இவ்விவகாரத்தை சிறுபான்மையினரான தமிழர் மீது தூக்கிப்போட்டு, அதை மையமாக வைத்து அரசியல் போரைத் தொடரவேண்டியதுதானே.....! அதுதானே தென்னிலங்கையின் 'பரவணி'ப்பழக்கம்? அதுவே இப்போதும் நடக்கின்றது.

''தனது இலக்குகளை இராணுவ ரீதியில் அடைய முடியாமல் தோல்விகண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, அரசுத் தரப்பு எம்.பிக்களை விலைக்கு வாங்கி வரவு - செலவுத்திட்டத்தின்போது அரசைக் கவிழ்க்கக் கபட சதித்திட்டம் தீட்டியுள்ளது.'' - என்று பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருக்கின்றமை - இப்படி மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் அவர் முடிச்சுப் போட்டிருக்கின்றமை - தெற்கின் அரசியல் அதிகாரப் போருக்கு தமிழர் விவகாரத்தை மையத்துக்கு இழுக்கும் வழமையான போக்கின் ஓர் அங்கமே.

அரசை விட்டு வெளியேறி, அரசுத் தரப்புக்கு எதிராக வரவு - செலவுத்திட்டத்தில் வாக்களிப்போருக்கு பெருந்தொகைப் பணம் கொடுப்பதற்கு புலிகள் அமைப்புத் தயாராகி இருக்கிறது என அரசுக்கு நம்பகரமாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார் ரம்புக்வெல.

ஆக, ஆளும் தரப்பில் இருப்போர் அரசுக்கு எதிராகத் திரும்பினால் அவர்கள் மீது 'புலி' முத்திரை குத்தப்படும் என்பதைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டார் ரம்புக்வெல.

தென்னிலங்கையின் அரசியல் குளறுபடிகளுக்குக் கூட புலிகளைத்தான் தெற்கு நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. என்னே பரிதாபம்.....!

# ஆயுதக் கொள்வனவு பற்றிய அறிக்கையை நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பியுங்கள்!

## அரசைக் கோருகின்றது ஐக்கிய தேசியக்கட்சி

கொழும்பு, நவ. 14

இந்த அரசு இதுவரை மேற்கொண்ட ஆயுதக் கொள்வனவு தொடர்பான விரிவான அறிக்கையை, அரசு உடனடியாக நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு கூறியவை வருமாறு:-

இந்த அரசு இதுவரை எவ்வளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது என்பது யாருக்கும் தெரியாது. ஆயுதக் கொள்வனவிற்காகவே 'லங்கா லொஜிஸ்டிக்ஸ்' என்ற அரச நிறுவனம் உருவாக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் ஊடாக அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்ற போதிலும் இது தொடர்பான அறிக்கை எதனையும் அரசு நாடாளுமன்றத்துக்கு இதுவரை சமர்ப்பித்ததில்லை.

இவ்விவகாரம் பற்றிய விடயங்களை அறியும் உரிமை நாடாளுமன்றுக்கு உண்டு. ஆகவே, அரசு இது தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்திற்கு உடன் சமர்ப்பித்தாக வேண்டும்.

இந்த ஆயுதக் கொள்வனவு தொடர்பாகக் கணக்காய்வு செய்வதற்குத் தமக்கு அதிகாரம் ஏதுமில்லை என்று கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அத்தகைய நிலைமை துரதிஷ்டவசமானது.

அது மாத்திரமின்றி தற்போதுள்ள அமைச்சுகள் அனைத்தினதும் அதிகாரங்களையும் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின்கீழ் - அதாவது நிதி அமைச்சின் கீழ் - கொண்டுவர முயற்சி செய்கின்றார்.

தற்போது இந்த அமைச்சுகள் அனைத்தினதும் அதிகாரங்களில் 90 வீதமானவற்றை ஜனாதிபதியும் ஜனாதிபதியின் உறவினர்களும்தான் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர்.

ஓர் அமைச்சின் பொறுப்புகள் அந்த அமைச்சின் கீழ்தான் வரும். ஆனால் வரலாற்றில் முதல் தடவையாக அமைச்சுக்கள் அனைத்தும் ஒருவரின் கீழ் வருகின்றன.

இது அமைச்சர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் ஒரு விடயம். இது தொடர்பாக சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சர்கள் தங்களது கௌரவத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும். - என்றார். (சி)

## ஐ.தே.க. அமைப்பாளர் துமிந்த ஆளும் கட்சியின் பக்கம் பாய்ந்தார்!

கொழும்பு, நவ. 14

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மேல்மாகாண சபை உறுப்பினரும் அக்கட்சியின் மேல்மாகாண அமைப்பாளருமான துமிந்த சில்வா அரசுப்பக்கம் - ஆளும் தரப்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பக்கம் - பாய்ந்தார்.

அண்மையில் அரசினால் தடை செய்யப்பட்ட 'சூரியன் எவ். எம்.' உட்பட்ட ஐந்து வானொலிச் சேவைகளை உள்ளடக்கிய 'ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்' நிர்வாக இயக்குநர் ரினோர் சில்வாவின் இளைய சகோதரரே துமிந்த சில்வா என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வானொலிச் சேவை அரசுக்கு எதிராகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்த பின்னணியிலேயே அந்த நிறுவனத்துக்கு எதிராக அரசின் கிடுக்குப்பிடி பாய்ந்தது என்பது தெரிந்ததே.

மேற்படி வானொலிச் சேவையை மீள ஆரம்பிப்பதற்கான அனுமதியை அந்நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பாகப் பல்வேறு இணக்கப்பாடுகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பல தரப்புகளிலும் கூறப்பட்டது.

அத்தகைய இணக்கத்தின் ஓர் அங்கமாகவே இக்கட்சித் தாவலும் இடம்பெற்றிருக்கலாம் என அரசியல் அவதானிகளை மேற்கோள்காட்டி சில இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டன.

துமிந்த சில்வா இதுவரை ஐ.தே.கட்சிக்கு பிரதான நிதி ஆதரவு மூலமாக இருந்து வந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்தமையை அடுத்தே அவர் அரசுப் பக்கம் தாவினார் என்று கூறப்படுகின்றது. ஆளும் கட்சியின் தொகுதி அமைப்பாளர் ஒருவராக அவர் விரைவில் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

## கச்சேரி - நல்லூர் வீதியில் சுடப்பட்டவர் நேற்று அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம்,நவ.14

கச்சேரி - நல்லூர் வீதியில் ஆசீர்வாதப்பர் வீதி முன்பாக நேற்றுமுன்தினம் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இச்சடலத்தை அவரது மனைவி நேற்று அடையாளம்காட்டினார்.

நல்லூர், இராஜ வீதியைச் சேர்ந்த வீரையா ஜெயரூபன்(வயது-26) என்பவரின் சடலமே அதுவாகும்.

சங்கானையில் இருந்து இடம் பெயர்ந்து வந்து நல்லூரில் வசித்து வந்த இவர், ஹலோரஸ்ட் நிறுவனத்தில் முன்னர் பணியாற்றி வந்தார். அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

நேற்றுமுன்தினம் காலை கல்வியங்காட்டுச் சந்தைக்குச் செல்வதாகக் கூறிச்சென்றவர் வீடு திரும்பவில்லை என்று அவரது மனைவி விசாரணையில் தெரிவித்தார்.

மரண விசாரணை நடத்திய பதில் நீதிவான் க.கேசவன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1)

## ஜே.வி.பியின் உறுப்பினர் பேச ஐ.தே.க.நேரம் வழங்கியது

ஜே.வி.பியுடன் முரண்பட்டுக் கொண்டு அக்கட்சிக்குள்ளே தனித்துச் செயற்படும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக நேற்று நாடாளுமன்றில் உரையாற்றுவதற்கு ஜே.வி.பி. நேரம் வழங்கவில்லை.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரத்தைப் பெற்றே நந்தன குணதிலக உரையாற்றினார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களுக்கிருந்த நேரத்தில் 15 நிமிடங்களுக்கும் மேலான நேரத்தை நந்தன விற்கு வழங்கி அவர் உரையாற்ற சந்தர்ப்பம் கொடுத்தனர்.

சுமார் ஒருவருடமாக ஜே.வி.பியுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கும் நந்தன குணதிலக முரண்பாடு ஏற்பட்டது முதல் அமெரிக்காவிலேயே வாழ்ந்து வந்தார். அவர் அவ்வப்போது இலங்கை வந்து நாடாளுமன்றத்திற்குச் சமூகம் கொடுப்பார். இந்த வகையில் நீண்ட காலமாக நாடாளுமன்றிற்கு வராமல் இருந்த நந்தன கடந்த வாரம் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அன்று புதன்கிழமை 07 ஆம் திகதி நாடாளுமன்றுக்கு வந்திருந்தார்.ஒரு வருடத்தின் பின் அவர் நேற்றுத்தான் உரையாற்றினார். அவர் உரையாற்ற ஜே.வி.பி அவருக்கு நேரம் வழங்காததால் ஐக்கிய தேசியக் கட்சி நேரம் வழங்கியது. (சி)

## உடப்பில் தமிழ் இளைஞரை ஆயுததாரிகள் கடத்தினர்

கொழும்பு, நவ. 14

சீருடை அணிந்த ஆயுததாரிகள் எனக் கூறப்படுவோரால் இளம் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் புத்தளம் உடப்புப் பகுதியில் உள்ள வீட்டில் வைத்துக் / கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றார்.

தங்கரட்ணம் பாலசுப்பிரமணியம் (வயது - 35) என்பவரே புத்தளம், உடப்பு, செல்வபுரத்திலிருக்கும் அவரது வீட்டில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கறுப்பு நிறச் சீருடையில் வந்த ஆயுததாரிகள் ஐவரினால் கண்கள் கட்டப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார் என அவரது மனைவி மங்களேஸ்வரியால் உடப்பு பொலிஸ் நிலையத்திலும் மக்கள் கண்காணிப்புக் குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. (சி)

## விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,நவ.14

கோப்பாய் மாதா கோவிலடிப் பகுதியில் உள்ளவீடு ஒன்றுக்குள் திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் புகுந்த ஆயுததாரிகளால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டார்.

குருநகர், தண்ணீர்த் தாங்கியடியைச் சேர்ந்த சிந்தா துரைராஜா ஜேம்ஸ் லக்ஷன் (வயது-24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

நெல்லியடியில் திருமணம் செய்து அங்குவசித்து வந்த அவர் கோப்பாயில் உள்ள தமது மாமன் சுகவீனமுற்று இருந்ததை அறிந்து அங்கு வந்திருந்தார். அன்று அங்கு தங்கிநின்றபோது திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் அங்கு ஆயுதக்குழு ஒன்று சென்றது. அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்யப்போவதாகத் தெரிவித்த அக்குழு பிரஸ்தாப நபரை விசாரணைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கூட்டிச் சென்றது.

நேற்றுக் காலை அவரது சடலம் கோப்பாயில் மாமனார் வீட்டிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் மீட்கப்பட்டது.

இதுகுறித்து விசாரணை நடத்திய யாழ். பதில் நீதிவான் க.கேசவன் சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1-203)

## இணுவில் இந்துக்கல்லூரி நாசவேலை; நால்வர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம் ,நவ.14

இணுவில் இந்துக்கல்லூரிக்குள் ஞாயிற்றுக்கிழமை புகுந்து பெரும் அட்டகாசம் புரிந்து சேதங்களை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களைபொலிஸார் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்நிலையில் நேற்று ஆஜர்செய்தனர்.

கைதானவர்களை பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரினார். அந்தமனுவை நிராகரித்து நால்வரையும் எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 29 | வியாழக்கிழமை 15.11.2007 |
| திதி : பஞ்சமி | பி.ப 12.01 |
| நட்சத்திரம் : | பூராடம் |
| | மு.பகல் : 08.56 |
| சுபநேரம் | : 07.33 - 09.07 |
| ராகுகாலம் | : 01.37 - 03.07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை சூடு!

## இராமேஸ்வரத்தில் பதற்றம்

சென்னை, நவ. 14

இராமேஸ்வரத்தில் இருந்து தொழிலுக்கு சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார். அதனைத் தொடர்ந்து இராமேஸ்வரம் பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

சுமார் 600 மீனவர்கள் நடுக்கடலில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை, இலங்கைக் கடற்படையினர் தங்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் -

அதனால் தாம் கரைதிரும்பியதாகவும் - மீனவர்கள் இராமேஸ்வரம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கிருபைராஜா என்பவர் காயமடைந்தார். அவர் இராமேஸ்வரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-1)

# முஷாரப்புக்கு பெனாஸிர் எச்சரிக்கை!



வீட்டில் இருந்து வெளியேற விடாது பொலிஸாரால் பெனாஸிர் தடுக்கப்பட்ட காட்சி.

பாக். ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை உடனடியாகப் பதவியிலிருந்து விலகிவிடுமாறு பெனாஸிர் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஐந்து நாள்களில் இரண்டாவது தடவையாகவும் வீட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ, 'ஜியோ' தனியார் தொலைக்காட்சிக்கு தொலைபேசி மூலமாக தாம் அளித்த பேட்டியொன்றில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

''பாகிஸ்தானைக் காப்பாற்றும் பொருட்டு முஷாரப் பதவி துறக்கவேண்டும். ஜன நாயகத்துக்கான வழியில் தாமாகவே அவர் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றார்.'' என்றும் அவர் அப்பேட்டியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்கால அரசாங்கத்தில், முஷாரப்பின் கீழ் பணியாற்றுவீர்களா?'' எனத் தொடுக் கப்பட்ட வினாவொன்றுக்கு அவர் சட்டென, ''இல்லை'' என விடையளித்துள்ளார்.

''நீங்கள் நாடு கடத்தப்பட்டு விடுவீர்கள்'' என செய்திகள் அடிப்படுகின்றன. உங்கள் நிலைப்பாடு என்ன? எனத் தொடுக்கப்பட்ட பிறிதொரு கேள்விக்கு அவர், ''வெளி நாட்டுக்குச் செல்வதைவிட, இங்கு சிறை வாழ்க்கையையே மேற்கொள்வேன். நான் கைது செய்யப்பட்டாலும் எனது மக்களை விட்டுவிடமாட்டேன்'' எனப் பதிலளித்துள்ளார். ''முஷாரப் ஜனாதிபதி பதவியிலிருந்தும் இராணுவத் தளகர்த்தா பதவியிலிருந்தும் விலக வேண்டும். அத்துடன் உத்தேசத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்கென, தேசிய நல்லிணக்கப்பாட்டோடு கூடிய இடைக்கால அரசாங்கமொன்று நிறுவப்படவேண்டும். '' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ''முஷாரப் இரு பதவிகளிலிருந்தும் விலகவேண்டும். அவருக்கு எதிராக, கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பொருட்டு, இம்ரான் கானின் அரசியல் அமைப்பு உட்பட இதர எதிரணிக் குழுக்களோடும் எனது கட்சி தொடர்பு கொண்டுள்ளது.'' - என்றும் அவர் விவரித்துள்ளார்.

## மருந் தேவாலய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயோதிபப் பெண் ஒருவரும் காயமடைந்தனர்.

சிகிச்சைக்காக அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

மடுத்தேவாலயத்தின் விசாரணை அலுவலகத்திற்கு அருகில் உள்ள மரம் ஒன்றில் வீழ்ந்து வெடித்த ஷெல் ஒன்றினால் மரத்தின் கீழ் விளையாடிக்கொண்டிருந்த குறிப்பிட்ட சிறுவன் படுகாயமடைந்தான் என்று கூறப்பட்டது.

ஷெல் தாக்குதல்களை அடுத்து மடுத் தேவாலயப் பகுதியில் வாழும் மக்கள் பதற்றமும் பீதியும் அடைந்துள்ளனர்.

இந்தஷெல் தாக்குதல்கள் மன்னார் இராமாயணன் குளம் மற்றும் தம்பனைப் பக்கமாக இருந்து நடத்தப்பட்டன என்றும், இதனை படையினர் தான் நடத்தியிருப்பார்கள் என்று நினைப்பதாகவும் மடுத்தேவாலய பரிபாலகர் அருட்தந்தை எமலியாஸ் பிள்ளை தெரிவித்தார்.

மடுத்தேவாலயப் பகுதியில் எந்தத் தாக்குதல்களையும் நடத்தவில்லை என்று தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார-

மடுத் தேவாலயம் எந்த திசையில் இருக்கின்றது என்பது எமக்குத் தெரியும். மடுத் தேவாலயத்தை நோக்கி எந்த ஆட்லறித் தாக்குதல்களையும் படையினர் நடத்தவில்லை. நாம் அந்த தேவாலயத்தை மதிக்கிறோம்.

தாக்குதல் குறித்து முறைப்பாடுகள் கிடைத்தால் அது பற்றி விசாரணைகளை மேற்கொள்வோம் என்று கூறியிருக்கிறார் இராணுவப் பேச்சாளர்.

(சி)

## தொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தொலைத்தொடர்பு நிலையத்துக்கு வந்த ஆயுததாரிகள் அவருடன் கதைத்துவிட்டு பின்னர் சுட்டுவிட்டுத்தப்பி விட்டதாக விசாரணையில் தெரிவிக் கப்பட்டது.

யாழ். நீதிவான் இ.த விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

சடலத்தைப் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-203-51)

## மின் பற்றாக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப் பின்வருமாறு விவரித்தார்.

இரவு நேரத்தில் மட்டும் நேற்றுமுன்தினம் தொடக்கம் ஒரு மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. மின்சார சபையில் எல்லா மின் வலயங்களிலும் பாரபட்சமின்றி இந்த மின் வெட்டு மேற்கொள்ளப்படும்.

'கூல் எயார்' நிறுவனம் மின்சார சபைக்கு 15 மெகாவாட்ஸ் மின்சாரத்தைத் தருவதாக ஒப்பந்தம் செய்திருந்தது. ஆனால் அந்த நிறுவனம் வழங்க வேண்டிய 15 மெகா வாட்ஸூம் மின்சார சபைக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. படிப்படியாகக் குறைக்கப்பட்டுக் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் அந்த நிறுவனம் தனது மின் வழங்கலை நிறுத்திவிட்டது.

*அரைவாசியே உற்பத்தியாகிறது*

'அக்றிக்கோ' நிறுவனம் இப்போது 14 முதல் 15 மெகா வாட்ஸ் மின்சாரத்தை வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் மின்சாரத்தின் உச்ச பயன்பாடு மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே உள்ளது. இந்த வேளையில் 32 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவையாக உள்ளது. எனினும் தற்போது 18.5 மெகா வாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே வழங்கக்கூடியதாக வுள்ளது.

*உச்சபயன்பாட்டு நேரத்தில் பாவனையைக் குறையுங்கள்*

இதன்காரணமாகவே இரவில் உச்ச பயன்பாட்டு நேரத்தில் மின்வெட்டினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொதுமக்கள் இதனை உணர்ந்து கொள்ளவேண்டும். மின்சாரத்தின் உச்சபயன்பாட்டு நேரமாகிய மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான நேரத்தில் பொதுமக்கள் தமது மின்பாவனையைக் குறைத்துக் கொண்டால் மின் வெட்டு நேரத்தைமேலும் குறைத்துக் கொள்ளலாம்.

5 அல்லது 6 மின்குமிழ்களை வீடுகளில் ஒளிரவிடுபவர்கள் அவற்றில் இரண்டு அல்லது மூன்று மின்குமிழ்களை அணைத்தும், தொலைக்காட்சி, மின் அழுத்தி ஆகியவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்தியும் இந்தமின் வெட்டுநேரத்தைக் குறைக்க முடியும்.

*மக்களின் ஒத்துழைப்புத் தேவை*

வெறுமனே மின்சாரசபை அதிகாரிகளைக் குற்றம்சாட்டுவதை விடுத்து மக்கள் அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். வேண்டுமென்றே இந்த மின்வெட்டை நாம் மேற்கொள்ளவில்லை. கிடைக்கும் மின்சாரத்தை சீராக வழங்குவதற்காகவே இந்தமின்வெட்டு மேற் கொள்ளப்படுகிறது.

அத்துடன் இதற்குநிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எம்மால் இயன்ற வரை நாம் மேற்கொண்டு வருகின்றோம். - என்றார்.

*பிரச்சினையைத்தீர்க்க முழுமுயற்சி எடுக்கின்றோம்*

மின் விநியோக நிலை குறித்து யாழ் அரச அதிபர் கே.கணேஸ் அங்கு தெரிவித்ததாவது-

இந்த மின் வெட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி செயலகம் முதற்கொண்டு உரிய அனைத்துத் தரப்புகளுடனும் தொடர்புகொண்டு வருகின்றோம்.

மின்வெட்டில் யாருக்கும் பாரபட்சம் காட்டப்படவில்லை. தவிர்க்கமுடியாத காரணங்களால் சில இடங்களில் மின் வெட்டைமேற்கொள்ள முடியாதுள்ளது. எனினும் இப்போது எல்லா இடங்களிலும் ஒரு மணி நேர மின்வெட்டுக்கு ஏற்பாடாகியுள்ளது.

மின்சக்தி அமைச்சின் செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக 10 மெகாவாட்ஸ் மின்சார உற் பத்தித் திறன்கொண்ட மின்பிறப்பாக்கிகளைவாங்குவதற்கு மின்சாரசபை நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இந்த புதிய மின்பிறப்பாக்கிகள் எடுத்துவரப்பட்டு பொருத்தப்பட்டதும் பெரும்பாலும் மின் வெட்டுப்பிரச்சினை இருக்காது. தற்போதுள்ள மின்வெட்டு இன்னும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும்.

பொதுமக்கள் உச்ச பாவனை நேரங்களில் குறைவான மின்சாரத்தைப் பயன்படுத்தினால் விரைவில் இந்தமின்வெட்டுப் பாதிப்பைக் குறைக்கலாம் - என்றார்.

(அ-50)

## யாழ். மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மாதத்துக்குள் அனுமதிக்குமாறும் உத்தரவிட்டது.

*தீர்மானம் எடுக்கும் உரிமை மாணவருக்கு*

இந்த அனுமதி தொடர்பான விடயத்தில் விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் காரணத்தினால், இந்த அணியை விட்டு,அடுத்த அணியில் மருத்துவப் படிப்பைத் தொடர்வதற்கு புதிதாகத் தெரிவாகும் இந்த நாற்பது மாணவர்களில் யாரேனும் தீர்மானித்தால் அதற்கு அனுமதிக்கும்படியும், இவ்விடயத்தில் தீர்மானம் எடுக்கும் உரிமையை சம்பந்தப்பட்ட மாணவருக்கு அளிக்கும்படியும் நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் கே.ஸ்ரீபவன்,நீதியரசர் ரோஹினி பெரேரா ஆகியோரைக் கொண்ட ஆயமே இத்தீர்ப்பை நேற்று வழங்கியது.

திறமை அடிப்படை, மாவட்ட அடிப்படை, பின்தங்கிய மாவட்ட அடிப்படை ஆகியவற்றின் கீழ் மாணவர்களைப் பல்கலைக்கழகப் பீடங்களுக்குத் தெரிவுசெய்யும் விடத்தில் வேண்டுமென்றே தங்களுக்கு தவறிழைக்கப்பட்டு, வெட்டுப் புள்ளி உயர்த்தப்பட்டு, மருத்துவக்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது என யாழ். மாணவர்கள் தங்கள் மனுவில் முறையீடு செய்திருந்தனர்.

அதை ஏற்றுக்கொண்டே நீதிமன்றம் இத்தீர்ப்பை நேற்று வழங்கியது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் ஷாமெயின் குணவர்த்தனா, ஏமியாரிகிள் ஆகியோர் ஆஜரானார்கள்.

இதேவேளை -

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு 50 மாணவர்களை அனுமதிக்கும் வளங்கள் இருப்பதாக நிர்வாகம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்தியது.

அதன் பிரகாரம் அனுமதி கிடைத்தவர்களில் 30 மாணவர்கள் ரஜரட்ட பல்கலைக்கழகத்துக்கு சென்றுவிட்டனர். இதனால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிதாக மாணவர்களை வழங்குமாறு பல்கலைக்கழக நிர்வாகம் ஆணைக்குழுவிடம் கோரியிருந்தது.

நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக மேலும் முப்பது மாணவர்கள் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அனுமதி பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (அ-உ-1)

## தடை செய்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து செயற்படுதல் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு அங்கு சென்ற எழும்பூர் ஆறாவது நீதிமன்ற நீதிபதி தர்மன் மேற்படி குற்றச்சாட்டுக்களின் கீழ் சகலரையும் இருவார விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இதன் பிரகாரம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு அவர்கள் புழல் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டனர். (அ-1)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினரான சைமன் குக்கீஸ் நேற்றுத் தவிர்க்கமுடியாத காரணத்தால் நடாளுமன்றத்தில் சமுகமளிக்காததால் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது என கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்தது. (1)

## போர் நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யவேண்டும்.
* தேசிய பாதுகாப்பை உறுதிசெய்ய வாயளவில் பேசாது அறிக்கைகள் விடாது செயலில் காட்டவேண்டும்.
* அரசியல் தீர்வை வகுப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சித் தெரிவுக் குழுவை உடனடியாகக் கலைக்க வேண்டும்.
* மனித உரிமை மீறல்களை விசாரிப்பது என்ற போர்வையில் இலங்கையின் உள் விவகாரங்களில் ஐ.நா. தலையிடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

(அ-1)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna. 0212228250
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna. 0777222422
உலகில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களுடாக கம்பனிக்கணக்குகளுடன் VAT ஐயும் உள்ளடக்கி Network ஊடான கணக்குபதிவு முறைகளுடன்..............!
Diploma in Computerized Accounting
ACCPAC + Quickbooks premier + MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.
யாருக்கு ??
கணக்கியல்துறையில் (அரச, தனியார், NGO) வேலைசெய்துகொண்டிருப்பவர்களும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், பல்கலைகழக, உயர்தொழினுட்ப கல்லூரி மாணவர்கள், கணக்கியல்துறையில் கற்றுக்கொண்டிருப்போர், கற்றுமுடித்தவர்கள், கணக்கியல்துறை ஆர்வலர்கள் அனைவர்க்கும் ஏற்றது.......
இக்கற்கைநெறியினை ஒருவார or ஒருமாத or 3மாதகாலத்தில் பயிலலாம். தங்களுக்கு ஏற்ற நேரத்தில் வகுப்புக்கள் ஒழுங்குசெய்து தரப்படும்.
ஒருவாரகால வகுப்புக்கள்
19/11/2007- 09AM
Course Fee: 3500/=
3மாதகால வகுப்புக்கள் ஆரம்பம்
Week Day Batch 02 PM
1) 15/11/2007
2) 19/11/2007
WeekEnd Batch 02 PM
1) 17/11/2007
2) 24/11/2007

வினாத்தாள்
தரம் 01 முதல் O/L வரை 3ஆம்தவணை வினாத்தாள் பெறலாம்.
கற்சுமி
கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி

ஐடியல் அக்கடமி
நீராவியடி, யாழ்ப்பாணம்.
CHEMISTRY
A/L 2009
ஆரம்பம்: 14.11.2007
புதன் 4.00 மணி
ஆசிரியர்: A.தபேசன் (B.Sc.)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org